தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**8.04.2013 A.M**

---

## அரசின் வேளாண் நிவாரணத்தை நில குத்தகைதாரர்களிடம் வழங்க வலியுறுத்தல்

புதுவை அரசு அறிவித்த வேளாண் நிவாரணத்தை நில குத்தகைதாரர்களிடமே வழங்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

காரைக்கால் மாவட்ட திமுக விவசாய அணி நிர்வாகிகள் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை மாவட்ட அமைப்பாளர் என். ராமசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: காரைக்காலில் விவசாயம் பாதித்த நிலையில் ஹெக்டேருக்கு ரூ. 20 ஆயிரம் நிவாரணம் என அறிவித்த புதுவை அரசை திமுக விவசாய அணி பாராட்டுகிறது. 2011-12 -ம் ஆண்டில் பாசனத்துக்கு தண்ணீர் வராததால், சுமார் 700 ஹெக்டேர் விளைநிலம் தரிசாகப் போடப்பட்டுவிட்டது. எனவே, இவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், தற்போது அளிக்கப்படும் நிவாரணத்தில் 50 சதவீத நிவாரணத்தை கூடுதலாகத் தர வேண்டும்.

அரசு அறிவித்த நிவாரணத் தொகையை நிலத்தை குத்தையில் சாகுபடி செய்யும் விவசாயிகளிடமே தர வேண்டும். நிகழாண்டு விவசாயம் மேற்கொள்வதற்கு ஏற்ப முன்னதாகவே பாசிக் நிறுவனம் மூலம் வேளாண் இடுபொருள்களான விதை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை தடையின்றி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நடப்பாண்டு விவசாயம் மேற்கொள்ள ஏதுவாக, பொதுப்பணித் துறை, நகராட்சிப் பாசன வாய்க்கால்களை முறையாக தூர்வார வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் துணை அமைப்பாளர்கள் அ. ஞானதேசிகன், எஸ்.எம்.ஏ. ஆரீபு, எஸ்.பி. சண்முகம், கே. முத்தழகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## விவசாயிகளுக்கு பட்டா வழங்கக்கோரி மாநாடு

போடி வடக்குமலை விவசாயிகளுக்கு பட்டா வழங்க வலியுறுத்தி நடைபெற்ற சிறப்பு மாநாட்டில் நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

போடி வடக்குமலை பகுதியில் பல ஆண்டுகளாக விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு பட்டா வழங்கக் கோரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் சிறப்பு மாநாடு போடியில் சனிக்கிழமை இரவு நடைபெற்றது. மாவட்டத் தலைவர் டி.கண்ணன் தலைமை வகித்தார். போடி தாலுகா செயலாளர் இ.மூக்கையா, மலைவாழ் சிறு விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.மாயாண்டி, போடி-வடக்குமலை சிறு விவசாயிகள் சங்கத் தலைவர் மல்லிப்பட்டி அப்பாஸ்மந்திரி, ஊத்தாம்பாறை காப்பி விவசாயிகள் சங்கத் தலைவர் பாப்புத்தேவர், அணைக்கரைப்பட்டி விவசாயிகள் சங்கப் பிரதிநிதி சின்னன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலக்குழு உறுப்பினர் எம். பாக்யலட்சுமி வரவேற்றார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலர் பி.சண்முகம், துணைத் தலைவர் கே. முகமது அலி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர். நடராஜன், பெரியகுளம் சட்டப்பேரவை உறுப்பினர் ஏ. லாசர், கோவை முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கே.சி. கருணாகரன், விவசாயிகள் சங்க மாவட்ட துணைத் தலைவர் எல்.ஆர். சங்கரசுப்பு ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

மாவட்டச் செயலர் என். சுருளிநாதன் மாநாட்டு தீர்மானத்தை முன்மொழிந்தும், மாநிலக்குழு உறுப்பினர் கே. ராஜப்பன் வழிமொழிந்தும் பேசினர். மாநாட்டில் சி.பி.எம். தாலுகா செயலாளர் எஸ்.கே.பாண்டியன் மற்றும் பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர். விவசாய சங்க தாலுகா செயலாளர் எஸ்.செல்வம் நன்றி கூறினார்.

குரங்கனி, கொட்டகுடி, ஊத்தாம்பாறை, அகமலை, அத்தியூத்து, உலக்குருட்டி, அருங்குளம், பெரியாற்றுக்கோம்பை, முட்டைகோஸ்புலம் உள்ளிட்ட பகுதிகளில் பல தலைமுறையாக விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு பட்டா வழங்க வேண்டும், இவர்களிடம் வனத்துறை குத்தகை வசூலிக்கக் கூடாது, வனத்துறை நிலங்களில் நம்பர் போடும் முறையைக் கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ராசிபுரத்தில் பலத்த காற்றுடன் மழை

ராசிபுரம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை பலத்த காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய்தது.

சிறிது நேரத்தில் மழை நின்றதால், பொதுமக்கள் ஏமாற்றமடைந்தனர்.

ராசிபுரம் சுற்று வட்டாரப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை பலத்த காற்று வீசியது.

சிறிது நேரத்தில் ஆலங்கட்டி மழை பெய்யத் தொடங்கியது. இதையடுத்து, பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

ஆனால், மழை நீண்ட நேரம் நீடிக்கவில்லை.

நகரில் பலத்த காற்று வீசியதால், வர்த்தக நிறுவனங்களின் பெயர் பலகைகள் காற்றில் பறந்தன.

போக்குவரத்து காவலர் நிழல் குடை, சாலை தடுப்பு வேலிகள் காற்றில் சாய்ந்தன.

சாலையில் சென்றவர்கள் மீது புழுதிக் காற்று வாரி வீசியதால், பேருந்துகள், இரு சக்கர வாகனங்களில் சென்றவர்கள், வாகனத்தை இயக்க முடியாமல் ஆங்காங்கே சிறுது நேரம் நிறுத்தினர்.

கட்டானச்சம்பட்டி பகுதியில் பலத்த காற்றால் மரம் விழுந்து மாடு உயிரிழந்தது. இதே போல, மெட்டாலா பகுதியில் மரம் விழுந்ததில் இருவர் காயமடைந்தனர்.

### சிறு தானிய உணவை ஆர்வமுடன் நாடும் மக்கள்!

மறந்து போன சிறு தானிய உணவு வகைகளை மக்கள் மீண்டும் ஆர்வமுடன் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

முன்னர் மக்களின் உணவில் சோளம், கம்பு, கேழ்வரகு, திணை, சாமை, குதிரைவாலி போன்ற சிறுதானியங்கள் முக்கிய இடம் பெற்றிருந்தன.

காலப்போக்கில் அரிசியின் பயன்பாடு அதிகரித்தால், சிறுதானியங்கள் முக்கியத்துவத்தை இழந்தன. இதனால், ரத்தக்கொதிப்பு, சர்க்கரை, புற்றுநோய் போன்ற அச்சுறுத்தும் நோய்கள் அதிகரித்துள்ளன.

விதையிலேயே பாரம்பரிய குணமிழந்து, ரசாயன உப்புகளில் வளர்ந்து, கொடிய விஷக்கரைசலின் தெளிப்பில் மலர்ந்து, சத்துக்கள் மழித்து தீட்டப்பட்டு, வெள்ளைவெளேர் என காட்சியளிக்கும் அரிசிதான் இந்த நோய்களுக்கு அடிப்படையானது என உணவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மேலும், பீட்சா, பர்கர் போன்ற ஃபாஸ்ட்ஃபுட் கலாச்சாரமும் சேர்ந்து உடல் வளத்தை ஊனப்படுத்தி வருகின்றன. ஆனால், சிறுதானியங்களைக் கொண்டு சமைக்கும் உணவில் சாம்பார் ஊற்றிச் சாப்பிட முடியுமா, மீன் குழம்புக்கு ஒத்து வருமா, குழந்தைகள் விரும்பி உண்பார்களா என்ற அடுக்கடுக்கான கேள்விகள் பெரும்பாலன மக்களிடம் தொக்கி நிற்பதை

மறுக்க முடியாது. இதெல்லாம் சாத்தியமே என்கின்றனர் பாரம்பரிய தானிய உணவு நுகர்வு ஆர்வலர்கள்.

நாட்டின் மனித வளத்துக்கு எதிரான இந்த ஆபத்தை தடுக்க வேண்டும் எனில் அரிசியைத் தவிர்த்து அதை விட சத்துள்ள மருத்துவ குணங்கள் நிறைந்த சிறுதானியங்களின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும் என இயற்கை வேளாண் அறிவியலாளர்கள் பொதுமக்களிடம் இடையறாது பிரசாரம் செய்து விழிப்புணர்வை உருவாக்க முயன்று வருகின்றனர்.

இந்த முயற்சிகளுக்கு சற்றே பலன் கிடைத்துள்ளதை புதுக்கோட்டை நகரில்  பல்வேறு பகுதிகளில் உள்ள நடமாடும் கம்பங்கூழ், கேப்பைக்கூழ் விற்பனை நிலையங்களைப் பார்க்கும் போது உணர முடிகிறது.

நகரில் காலையில் நடைப்பயிற்சி செய்பவர்கள் கம்பங்கூழ், கேப்பைக்கூழ் ஆகியவைகளை ஆர்வத்துடன் அருந்திச் செல்கின்றனர். இதன் மூலம் மறந்து போன பாரம்பரிய தானிய உணவுகளின் பக்கம் மக்களின் கவனம் திரும்பியுள்ளதை பார்க்க முடிகிறது.

புதுக்கோட்டை நகரில் புதுக்குளம், விளையாட்டு அரங்கம், கிழக்கு ராஜவீதி, புது அரண்மனை வீதி, புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் கூழ் விற்பனை களை கட்டியுள்ளது.

""கடந்த மூன்று ஆண்டுகளாக கம்பு, கேப்பையில் கூழ் தயாரித்து விற்பனை செய்து வருகிறேன். காலை 6 முதல் 9 மணி வரைக்குள்ளாக சுமார் 50 பேர் கூழ் அருந்துகின்றனர். இதன் மூலம் சுமார் ரூ.300 முதல் 500 வரை வருவாய் கிடைக்கிறது. இதுபோல நகரில் பல்வேறு பகுதிகளில் உள்ள நடமாடும் கடைகள் மூலம் சுமார் 2 ஆயிரம் வரை பேர் கூழ் அருந்துகின்றனர்''என்கிறார் புதிய பேருந்து நிலையம் அருகே கூழ் விற்பனை செய்து வரும் அரசி மகளிர் சுய உதவிக்குழுவைச் சேர்ந்த கோகிலா.

தற்போது ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை பரவலாக்கும் வகையில் இதற்கென தனி உணவகங்கள் ஆங்காங்கே தொடங்கப்பட வேண்டும். அப்போதுதான் பாரம்பரிய தானிய உணவுகளின் பயன்பாடு அதிகரிப்பதுடன், ஃபாஸ்ட்ஃபுட் கலாச்சாரத்தில் சிக்கியுள்ள இளைய சமூகத்தை அதிலிருந்து விடுவிக்க முடியும் என்கின்றனர் பாரம்பரிய உணவு தானிய உற்பத்தியாளர்கள்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 26.46 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 26.46 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 91 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496

கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## வேளாண் சார்ந்த தொழில் தொடங்க வலியுறுத்தல்

தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண் சார்ந்த தொழில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தஞ்சாவூரில் இச் சங்கத்தின் மாவட்ட மாநாடு அண்மையில் நடைபெற்றது. மாநாட்டை சங்கத்தின் மாநிலத் தலைவர் என். முத்துக்கண்ணன் தொடக்கி வைத்தார்.

இதில் செங்கிப்பட்டியில் இயங்கும் காசநோய் மருத்துவமனையை மேம்படுத்தி கூடுதலாக மருத்துவர்களையும், ஊழியர்களையும் நியமித்து 24 மணிநேரமும் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் வேளாண் சார்ந்த தொழில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பட்டுக்கோட்டை - அரியலூர் இடையே புதிய ரயில் பாதை அமைக்கும் பணியை விரைவாகத் தொடங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும், புதிய நிர்வாகிகள் தேர்வில் தலைவராக வி. கரிகாலன், துணைத் தலைவராக என். அறிவழகன், செயலராக ஆர். மணிமாறன், துணைச் செயலராக க. அருளரசன், பொருளாளராக கே. செந்தில்குமார், செயற்குழு உறுப்பினர்கள் உள்பட 19 பேர் கொண்ட மாவட்டக் குழுத் தேர்வு செய்யப்பட்டது. இவர்களை மாநிலச் செயலர் ஆர். வேல்முருகன் அறிமுகப்படுத்தினார்.மாநிலப் பொருளாளர் எஸ். பாலா, மாவட்ட முன்னாள் தலைவர் டி. செல்வமணி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## "தண்ணீரையும், மண்ணையும் போற்றி பாதுகாக்க வேண்டும்

தண்ணீரும், மண்ணும் விவசாயத்தைக் காப்பதால் இவ்விரண்டையும்  விவசாயிகள் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்றார் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வேளாண் அறிவியல் மையத்தில் சனிக்கிழமை நடைபெற்ற உழவர் நண்பர்கள், அட்மா பணியாளர்களுக்கான உழவர் பெரு விழா பயிற்சி முகாமைத் தொடக்கிவைத்து ஆட்சியர் பேசியது:

விவசாயத்தை நேசித்து செய்யும் போது நெல், செடி, கொடி, மண், மரம் அனைத்தும் நம்முடன் பேசுகிறது.

உழவர் பெருவிழா பயிற்சி முகாமை விவசாயிகள் சரியான முறையில் பயன்படுத்தி விவசாயத்தில் புதிய யுக்திகளை கையாள முயற்சிக்க வேண்டும் என்றார் நடராசன்.

முகாமில் வேளாண் துறை கூடுதல் இயக்குநர் எம். கணேசன், இணை இயக்குநர் ஏ. கணேசன், துணை இயக்குநர் க. மயில்வாகனன் உள்ளிட்டோர் பங் கேற்றனர்.

## விவசாயிகளுக்கு ரூ. 11.73 லட்சத்தில் இயந்திரங்கள்

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் கன்னியாகுமரி மாவட்ட விவசாயக் குழுக்களுக்கு இயந்திரமயமாக்குதலுக்கு ரூ. 11.73 லட்சத்தில் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வழங்கும் விழா பறக்கையில் நடைபெற்றது.

விழாவில், வனத் துறை அமைச்சர் கே.டி. பச்சைமால் பங்கேற்று வேளாண் கருவிகளை வழங்கிப் பேசியதாவது:

வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறையை ஈடுசெய்யவும், வேளாண் பணிகளை உரிய காலத்தில் முடிக்கவும், வேளாண் உற்பத்தியைப் பெருக்கி வேளாண் நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில் வேளாண்மை இயந்திரமயமாக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 2012-13-ம் ஆண்டில் 16 பேர் கொண்ட விவசாயக் குழு அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

இக்குழுவுக்கு ரூ. 11,72,980 மதிப்பிலான 4 விசை உழுவைகள், 4 நெல்நாற்று நடும் கருவிகள், 4 களையெடுக்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றார் அமைச்சர்.

விழாவில், நாஞ்சில் முருகேசன் எம்.எல்.ஏ., மாவட்ட வருவாய் அலுவலர் பழனிச்சாமி, சார் ஆட்சியர் சங்கர்லால் குமாவத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கொடைக்கானலில் மிதமான மழை



கொடைக்கானலில் ஞாயிற்றுக்கிழமை இடியுடன் கூடிய மிதமான மழை பெய்ததால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கொடைக்கானலில் தற்போது சீசன் தொடங்கியுள்ளது. இதனால், விடுமுறை நாள்களில் சுற்றுலாப் பயணிகள் அதிகமானோர் வருகின்றனர். நகரில் அவ்வப்போது மழைச் சாரலும், மிதமான மழையும் பெய்து வருகிறது.

சுற்றுலா இடங்களான வெள்ளி நீர்வீழ்ச்சி, பில்லர் ராக், பசுமைப் பள்ளத்தாக்கு, பிரையண்ட் பூங்கா, குணா குகை, அமைதிப் பள்ளத்தாக்கு, மோயர் பாயிண்ட், பைன் பாரஸ்ட், ஏரிச்சாலை, கோக்கர்ஸ் வாக்,ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக காணப்பட்டனர். பலர் சாரல் மழையில் நனைந்தபடியே குதிரை சவாரி செய்தும், படகு சவாரி செய்தும் மகிழ்ந்தனர்.

கொடைக்கானலில் கடந்த இரு நாள்களாக அவ்வப்போது மழை பெய்தது. ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் இடியுடன் மிதமான மழை பெய்தது. இந்த மழையால் வெள்ளி நீர்வீழ்ச்சி, பியர்சோழா அருவி, வட்டக்கானல் அருவி போன்ற இடங்களில் நீர்வரத்து காணப்பட்டது.

வாகன நிறுத்தும் இடங்கள் தேர்வு: கொடைக்கானலில் சீசன் தொடங்கியதை முன்னிட்டு, அதிகமான சுற்றுலா வாகனங்கள் வருகின்றன. இதனால் சுற்றுலா இடங்கள் மற்றும் நகர் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து கொடைக்கானல் ஏரிச்சாலை,லாஸ்காட் சாலை, பைன் பாரஸ்ட், மோயர் பாயிண்ட் ஆகிய இடங்களைப் பார்வையிட்டு சுற்றுலா வாகனங்களை நிறுத்தும் இடத்தை தேர்வு செய்ய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

கடைகளில் ஆய்வு: கொடைக்கானல் பகுதி உணவகங்களில் கண்டிப்பாக விலைப் பட்டியல் வைக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, அதிகாரிகள் ஹோட்டல்களில் ஆய்வு செய்து உணவின் தரம் மற்றும் சுகாதாரமாக உள்ளதா எனச் சோதனையிட்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**8.04.2013 A.M**

---

## வரத்து குறைவால் இஞ்சி விலை கிடு கிடு

கொச்சி:சந்தைக்கு இஞ்சி வரத்து குறைந்துள்ளதால், இதன் விலை உயர்ந்து வருகிறது. 60 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை இஞ்சி விலை, கேரளாவில், 3,800 ரூபாயாக அதிகரித்துள்ளது என, வயநாடு மாவட்டத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.கடந்த ஆண்டு, இஞ்சிக்கு உரிய விலை கிடைக்காததால், பல விவசாயிகள் இஞ்சி சாகுபடியில் ஈடுபடவில்லை. இதனால், நடப்பாண்டில் இதன் உற்பத்தி குறைந்துள்ளதுடன், சந்தைக்கும் வரத்து குறைவாகவே உள்ளது. இதன் காரணமாகவே, இஞ்சி விலை உயர்ந்துள்ளது.கேரளா மற்றும் வடக்கு கர்நாடகாவில் அதிகளவில் இஞ்சி உற்பத்தியாகிறது.

இவ்விடங்களிலிருந்து, நாள் ஒன்றுக்கு, 1,500 - 2,000 டன் இஞ்சி வரத்து இருக்கும். ஆனால், தற்போது, மூன்றில் ஒரு பங்கு அளவிற்கே வரத்து உள்ளது.கடந்த ஆண்டு, இஞ்சி உற்பத்தியாகும் இடங்களில், 1 லட்சம் ஏக்கரில், இஞ்சி சாகுபடி செய்யப்பட்டிருந்தது. ஆனால், நடப்பாண்டு, இது, 25 ஆயிரம் ஏக்கராக குறைந்துள்ளது.உற்பத்தி செலவு அதிகரித்து வருவதால், இஞ்சி சாகுபடிக்கு அதிகளவில் முதலீடு தேவைப்படுகிறது. இதன் காரணமாகவே, பல விவசாயிகள் இஞ்சி பயிர் இடுவதில் ஆர்வம் காட்டவில்லை என, கூறப்படுகிறது.

## உலக சந்தையில் வரவேற்பு குறைவால் ஓசூரில் ரோஜா மலர்கள் தேக்கம்

ஓசூர்:ஓசூர் ரோஜா மலர்களுக்கு உலக சந்தைகளில், வரவேற்பு இல்லாததால், 1 கோடி ரோஜாக்கள் தேக்கமடைந்துள்ளன.கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் பகுதியில் அதிகளவு ரோஜா சாகுபடி நடக்கிறது. ஓசூர், பேரிகை, பாகலூர், உத்தனப்பள்ளி, குடிசெட்லு, பேளகொண்டப்பள்ளி, கெலமங்கலம், பூனப்பள்ளி, தேன்கனிக்கோட்டை மற்றும் தளி சுற்றுவட்டார பகுதியில் ஆண்டு முழுவதும், 5,000 ஏக்கரில் விவசாயிகள் திறந்தவெளி மற்றும் பசுமை குடில்களில் ரோஜா மலர் சாகுபடி செய்கின்றனர்.

ஆஸ்திரேலியா:ஓசூர் அடுத்த அமுதகொண்டப்பள்ளியில் அரசு சார்பு நிறுவனமான "டான்ப்ளோரா, 25 ஹெக்டேரில் ரோஜா மலர் உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்கிறது. இந்த பகுதிகளில் உற்பத்தியாகும் தாஜ்மஹால், கிராண்ட் கலா, பஸ்ட்ரெட், எல்லோ, பிங், ஆரஞ்ச், ஒயிட் உள்ளிட்ட, 40 வகை ரோஜா மலர்கள், ஆஸ்திரேலியா, மலேசியா, நியூசிலாந்து, டென்மார்க், கனடா, துபாய், சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடு
களுக்கு ஏற்றுமதியாகின்றன.

காதலர் தினம், அன்னையர் தினம், கிறிஸ்துமஸ், புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது, அதிகளவு மலர்கள் ஏற்றுமதியாவது வழக்கம்.கடந்த இரண்டு ஆண்டுகளாக, பருவமழை தவறியதால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, ரோஜா சாகுபடியில் பாதிப்பு ஏற்பட்டது. தினமும், 16 மணி நேரம் மின்தடையால், மின்மோட்டார் மூலம் நீர் பாசனம் செய்ய முடியவில்லை.ஓசூர் பகுதியில் கடும் வெயில் சுட்டெரிக்கிறது. இதனால், ரோஜா செடிகளில் டிரிப்ஸ், மைட்ஸ் ஆகிய நோய் தாக்குதல்கள் பரவி வருகின்றன. நோய் தாக்கிய ரோஜாக்களில், மொட்டுகள் கறுத்து உதிர்ந்து விடுகின்றன. இதனால், ஏற்று மதிக்கு லாயக்கற்ற வகையில், தரமில்லாத பூக்கள் உற்பத்தியாகின்றன.

சீன பூக்கள், தரமாகவும், ஓசூர் ரோஜாவை விட மலிவு விலையிலும் கிடைப்பதால் வெளிநாட்டு மலர் வியாபாரிகள், தற்போது சீன ரோஜா பூக்களை விரும்பத் துவங்கி உளளனர்.இதனால், ஓசூர் ரோஜா மலர்களுக்கு சர்வதேச சந்தையில் மவுசு குறைந்து வருகிறது. கடந்த காலத்தில், 20 பூக்கள் கொண்ட ஒரு கொத்து ரோஜா மலர், 180 ரூபாய் முதல், 300 ரூபாய் வரை, விற்பனையானது.

விலை வீழ்ச்சி:தற்போது, அதிகபட்சம், 120 ரூபாய் வரை, மட்டுமே விற்பனையாகிறது. உள்நாட்டு சந்தைகளிலும் ஓசூர் ரோஜாக்களுக்கு முன்பிருந்த மவுசு குறைந்து விட்டதால், ஒரு கொத்து ரோஜா மலர் அதிகபட்சம், 30 ரூபாய் வரை, மட்டுமே விற்பனையாகிறது.விலை வீழ்ச்சியால் ஏற்றுமதி செய்ய முடியாமல், ஓசூர் மலர் பண்ணைகளில், 1 கோடி ரோஜா மலர்கள் வரை, தேங்கி உள்ளன. இதனால், ரோஜா விவசாயிகள், வங்கியில் வாங்கிய கடனை திரும்பச் செலுத்த முடியாமல் அவதிப்படுகின்றனர்.வங்கிகள் ரோஜா விவசாயத்துக்கு கடன் வழங்குவதை நிறுத்திவிட்டதால், ஓசூர் பகுதியில் ரோஜா விவசாயம் அழிவை நோக்கி செல்கிறது.

தோட்டங்களை விற்க முயற்சிகுடிசெட்லு விவசாயி சிவா கூறியதாவது:தண்ணீர் பிரச்னை, மின்தடை மற்றும் விலை வீழ்ச்சியால் விவசாயிகளால் தொடர்ந்து ரோஜா செடிகளை பராமரிக்க முடியவில்லை. ஒரு பூ உற்பத்தி செய்ய மூன்று ரூபாய் செலவாகிறது. ஆனால், ஒரு பூ, 1.50 ரூபா#க்கு தான் விற்பனையாகிறது.இந்த நஷ்டத்தை ஈடுகட்ட முடியவில்லை. அதனால், ஓசூர் தாலுகாவில் ஏராளமான ரோஜா தோட்டங்களை விற்க முடிவு செய்துள்ளனர்.
தோட்டக்கலைத் துறை அதிகாரிகள், பாரம்பரிய ரோஜா விவசாயத்தை மேம்படுத்தவும், ரோஜா விவசாய வீழ்ச்சியை அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லவும் நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறு, அவர் கூறினார்.

## நெல் வரத்து அதிகரிப்பால் அரிசி விலை திடீர் சரிவு

சேலம்:தமிழகத்தில், நெல் வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து, அரிசி விலை சரிவடைந்து உள்ளது.இதுகுறித்து, தமிழக நெல், அரிசி வணிக சம்மேளன மாநில துணைத் தலைவர், சியாமளநாதன் கூறியதாவது:தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை பொய்த்த நிலையில், கர்நாடகம், காவிரியில் தண்ணீர் திறக்க மறுத்ததால், நெல் விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால், நெல், அரிசி விலையில் உயர்வு ஏற்பட்டது.

பண்ருட்டி:செஞ்சி, சேத்பட்டு, செய்யாறு, வந்தவாசி, விருத்தாசலம், தியாகதுருவம், சங்கராபுரம், வானாபுரம், மணலூர்பேட்டை, மத்கடிபட்டு, கடலூர், திருக்கனார், பண்ருட்டி, திருவனைநல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள, சந்தைப்படுத்தும் குழுக்களுக்கு விற்பனைக்கு வரும், நெல் வரத்து சமீப காலமாக அதிகரித்துள்ளது.நெல் கிலோ, 12.50 ரூபாயிலிருந்து, 11 ரூபாயாக சரிவடைந்துள்ளது. இதனால், 75 கிலோ கொண்ட ஒரு மூட்டை பி.பி.டி., (பாபத்லால் பொன்னி) அரிசி விலை, 3,100 ரூபாயில் இருந்து, 2,600 ரூபாயாக சரிந்தது.

ஏ.டி.டி., 37 அரிசி கிலோ, 32 ரூபாய்க்கு விற்றது, இப்போது, 27 ரூபாயாகவும், ஏ.டி.டி., 45 அரிசி கிலோ, 32 ரூபாய்க்கு விற்றது, 28 ரூபாயாக சரிந்துள்ளது.தமிழக அரசு, கூட்டுறவு அங்காடிகள் மூலம், 1 லட்சம் டன் அரிசியை கிலோ, 20 ரூபாய் விலையில் விற்பனை செய்வதாக அறிவித்துள்ளது. ஆனால், வெளி மாநிலங்களிலேயே இன்றைய நிலவரப்படி நெல் கிலோ, 13 - 14 ரூபாய்க்கு விற்கிறது. போக்குவரத்து செலவு வகையில், மூட்டைக்கு, 100 ரூபாய் உயர்வு ஏற்படும். அப்படி இருக்கையில், எந்த வகையான அரிசியை அரசு வினியோகம் செய்யப் போகிறது, என்பது தெரியவில்லை.

உயர், நடுத்தர ரக அரிசியை, அரசு விற்பனை செய்யும் பட்சத்தில், வெளி சந்தை அரிசி விலையில், சரிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. தற்போதைய நிலையில், அரிசி விற்பனை மந்த நிலையில் உளளது. இந்நிலையில், அரிசியை, அரசே விற்பனை செய்யும் பட்சத்தில், அரிசி விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளது.மின்தடை:அரிசி ஆலைகளுக்கு மின் தடையில் இருந்து, அரசு விலக்கு அளித்துள்ள நிலையில், போதிய அளவு மின்சாரம் கிடைப்பது இல்லை. எனவே, ஆலைகளுக்கு தங்கு தடையின்றி மின்சாரம் வழங்குவதோடு, வெளி மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படும் நெல்லுக்கு, முற்றிலும் வரி விலக்கு அளித்தால், அரிசி விலை தானாக குறைய வாய்ப்பு உள்ளது.இவ்வாறு, சியாமளநாதன் கூறினார்.

### தேயிலை உற்பத்தி 5.54 சதவீதம் உயர்வு

குன்னூர்:நடப்பு 2013ம் ஆண்டின், முதல் இரண்டு மாதங்களில்(ஜன.,- பிப்.,), நாட்டின் தேயிலை உற்பத்தி, கடந்த ஆண்டின் இதே காலத்தை விட, 5.54 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது என, தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.மதிப்பீட்டு காலத்தில், அசாம் மாநிலத்தின் தேயிலை உற்பத்தி, 2.30 லட்சம் கிலோ அதிகரித்து, 8.30 லட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது. அதேசமயம், மேற்குவங்கத்தில், இதன் உற்பத்தி, 4.70 லட்சம் கிலோ சரிவுஅடைந்து, 25.30 லட்சம் கிலோவாக குறைந்து உள்ளது. ஒட்டு மொத்த அளவில், வட மாநிலங்களில் தேயிலை உற்பத்தி, 1.60 லட்சம் கிலோ குறைந்து, 34.50 லட்சம் கிலோவாக சரிவடைந்துள்ளது.

அதேசமயம், தென் மாநிலங்களில் தேயிலை உற்பத்தி, 19.90 லட்சம் கிலோ அதிகரித்து, 3.14 கோடி கிலோவாக வளர்ச்சி கண்டுள்ளது.குறிப்பாக, தமிழகத்தின் தேயிலை உற்பத்தி, 14.90 லட்சம் கிலோ அதிகரித்து, 2.23 கோடி கிலோவாக உயர்ந்து உள்ளது. இதே போன்று கேரளாவின் தேயிலை உற்பத்தி, 3.30 லட்சம் கிலோ உயர்ந்து, 82.40 லட்சம் கிலோவாக வளர்ச்சி கண்டுள்ளது.ஒட்டு மொத்த அளவில், கணக்கீட்டு காலத்தில், இந்தியாவின் தேயிலை உற்பத்தி, 3.49 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.

இது, கடந்த 2012ம் ஆண்டின் இதே காலத்தில், 3.30 கோடி கிலோவாக இருந்தது.சென்ற பிப்ரவரி மாதத்தில், நாடு தழுவிய அளவில் காணப்பட்ட, பாதகமான வானிலையால், தேயிலை உற்பத்தி, அம்மாதத்தில், வெகுவாக குறைந்து போயுள்ளது.குறிப்பாக, வட மாநிலங்களில், இதன் உற்பத்தி, 1.50 லட்சம் கிலோ குறைந்து, 7.90 லட்சம் கிலோவாக சரிவடைந்து உள்ளது. மேலும்,

அம்மாதத்தில், தென் மாநிலங்களில், தேயிலை உற்பத்தி, 9.20 லட்சம் கிலோ குறைந்து, 1.23 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது.ஒட்டு மொத்த அளவில், சென்ற பிப்ரவரியில் மட்டும், நாட்டின் தேயிலை உற்பத்தி, 10.50 லட்சம் கிலோ குறைந்து, 1.31 கோடி கிலோவாக சரிவடைந்து உள்ளது.

## 1,000 விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி

சேலம்: தாரமங்கலம் வட்டாரத்தில், 1,000 விவசாயிகளுக்கு, பயிர் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

தாரமங்கலம் வட்டாரத்தில், விதை கிராம திட்டத்தின் கீழ் பாப்பம்பாடி, கோணகாபாடி, மல்லிகுட்டை, வணிச்சம்பட்டி, ஆரூர்பட்டி, செலவடை, அரியாம்பட்டி, எலவம்பட்டி, எடையப்பட்டி, லட்சுமாயூர் ஆகிய பத்து கிராமங்களில், 1,000 விவசாயிகளுக்கு, தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

பச்சை பயறு, தட்டைப்பயறு, உளுந்து, துவரை, மொச்சை அவரை பயிர்களில் அதிக மகசூல் பெறுவதற்கான தொழில் நுட்பங்கள் குறித்து, விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. எண்ணெய் வித்து பயிர்களான, நிலக்கடலை, ஆமணக்கு, எள் பயிர்களில் அதிக மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்பங்கள், சோளம், ராகி, மக்காச்சோளம் பயிர்களில் அதிக மகசூல் பெறுவது எப்படி என்பது குறித்து, வேளாண் அதிகாரிகள் விளக்கினர்.

தாரமங்கலம் வேளாண் உதவி இயக்குனர் பன்னீர்செல்வம், வேளாண் அலுவலர் சாகுல் ஹமீது, தாரமங்கலம் வட்டார அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் அகிலா, உதவி வேளாண் அலுவலர் கந்தசாமி உள்பட வேளாண் அதிகாரிகள் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

## மணக்கும் மல்லிகை விலை சரிவு சோகத்தில் விவசாயிகள்

திருத்தணி:ஒரு கிலோ, 200 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்த மல்லிகை, தற்போது, கிலோ, 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பூ பறிக்கும் கூலி

கூட கிடைக்கவில்லை என, விவசாயிகள் புலம்புகின்றனர்.

கடந்த, 10 நாட்களுக்கு முன் வரை திருத்தணியில், மல்லிகை கிலோ, 200 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்தது. நேற்று முன்தினம் முதல் கிலோ, 40 ரூபாய்க்கு கூவி கூவி விற்கப்படுகிறது. மல்லிகை வரத்து அதிகரித்ததும், தேவை அதிகம் இல்லாததாலும், குறைந்த விலைக்கு விற்கப்படுவதாக வியாபாரிகள்

தெரிவித்தனர்.

திருத்தணி பூ சந்தைக்கு, கோபாலபுரம், தும்பிகுளம், தாழவேடு, கோதண்டராமபுரம், காமாட்சிகண்டிகை உள்ளிட்ட, 20 கிராமங்களில் இருந்து மல்லிகை வருகிறது. தினமும், இரண்டு முதல் இரண்டரை டன் மல்லிப் பூக்கள் வரத்து இருக்கும்.

கோவில் நகரம் திருத்தணியில், திருமண மண்டபங்கள் ஏராளமாக உள்ளன. திருமண சீசனில், பூக்களின் தேவை அதிகம் இருக்கும் என்பதால், பூக்கள் அனைத்தும் உள்ளூரிலேயே விற்று தீர்ந்துவிடும். மற்ற நாட்களில் இங்கிருந்து சென்னை, காஞ்சிபுரம், பெங்களூரு, வேலூர், மதனபள்ளி ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

வெயில் அதிகரிக்கும்போது, மல்லிகை விளைச்சலும் அதிகமாக இருக்கும். மழைக்காலத்தில் விளைச்சல் குறையும். தற்போது, கோடை வெயில் கொளுத்தி வருவதையடுத்து, மல்லிகை வரத்து அதிகரித்துள்ளது.

திருத்தணி சந்தைக்கு, நாளொன்றுக்கு, நான்கு டன் மல்லிகை வந்து இறங்குகிறது. முகூர்த்த நாட்கள் இல்லாததால், பூக்கள் தேக்கம் அடைகின்றன. இதையடுத்து, குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. இனிவரும் நாட்களில், வெயில் அதிகரிக்கும் பட்சத்தில், மேலும் விலை குறையும் என, வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து, தும்பிகுளத்தைச் சேர்ந்த மல்லிகை விவசாயி கோபால் கூறுகையில், ""பூ பறிக்க ஒருவருக்கு, 100 ரூபாய் கூலி கொடுக்கிறோம். பூக்களை திருத்தணிக்கு இருசக்கர வாகனத்தில் கொண்டு வருகிறோம். பறிப்பு கூலி

மற்றும் பெட்ரோல் செலவு கூட எங்களுக்கு கிடைப்பதில்லை"

என்றார்.

காஞ்சிபுரம் மாவட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போனதால், விவசாயிகள் மாற்றுப் பயிர் மற்றும் குறுகிய காலப் பயிர்களை சாகுடி செய்து வருகின்றனர். இந்த மாவட்டத்தில் மல்லிகை பூ பரவலாக பயிரிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் முதல் வாரத்தில் இருந்து, ஜூலை மாதம் வரை மல்லிகை பூ அதிகளவில் பூக்க துவங்கும். இதன் காரணமாக ஒரு கிலோ பூ 100 ரூபாய்க்கு குறைவாக விற்கப்படும். நேற்று ஒரு கிலோ மல்லிகை பூ 80 ரூபாய்க்கு விற்கப்பட்டது .

இது குறித்து, திருக்கழுக்குன்றம் புல்லேரியைச் சேர்ந்த விவசாயி வெங்கடேசன் கூறியதாவது: தற்போது, 50 சென்ட் நிலத்தில் மல்லி பயிரிடுவதற்கு 20 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. களை எடுத்து, தொழு உரம், ரசாயன உரங்களையிடுகிறோம். வாரத்துக்கு ஒரு முறை பூச்சி மருந்து

தெளித்து செடிகளை பாதுகாத்து வருகிறோம். நல்ல விளைச்சல் இருக்கும் போது லாபத்தை பார்க்க முடியவில்லை.

தற்போது பூக்கள் வரத்து அதிகமாக உள்ளதால் விலையும் சரிந்து விட்டது. ஒரு கிலோ பூக்களை பறிப்பதற்கு 30 ரூபாய் கூலி கொடுக்கின்றோம் , இடைத்தரகர்களுக்கு நூற்றுக்கு, 15 ரூபாய் என, செலவுகள்போக, ஒரு கிலோவிற்கு 30 ரூபாய் தான் கிடைக்கிறது. இதனால் எங்களுக்கு பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## மணக்கும் மல்லிகை விலை சரிவு சோகத்தில் விவசாயிகள்

திருத்தணி:ஒரு கிலோ, 200 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்த மல்லிகை, தற்போது, கிலோ, 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பூ பறிக்கும் கூலி கூட கிடைக்கவில்லை என, விவசாயிகள் புலம்புகின்றனர்.

கடந்த, 10 நாட்களுக்கு முன் வரை திருத்தணியில், மல்லிகை கிலோ, 200 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்தது. நேற்று முன்தினம் முதல் கிலோ, 40 ரூபாய்க்கு கூவி கூவி விற்கப்படுகிறது. மல்லிகை வரத்து அதிகரித்ததாலும், தேவை அதிகம் இல்லாததாலும், குறைந்த விலைக்கு விற்கப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

திருத்தணி பூ சந்தைக்கு, கோபாலபுரம், தும்பிகுளம், தாழவேடு, கோதண்டராமபுரம், காமாட்சிகண்டிகை உள்ளிட்ட, 20 கிராமங்களில் இருந்து மல்லிகை வருகிறது. தினமும், இரண்டு முதல் இரண்டரை டன் மல்லிப் பூக்கள் வரத்து இருக்கும்.

கோவில் நகரம் திருத்தணியில், திருமண மண்டபங்கள் ஏராளமாக உள்ளன. திருமண சீசனில், பூக்களின் தேவை அதிகம் இருக்கும் என்பதால், பூக்கள் அனைத்தும் உள்ளூரிலேயே விற்று தீர்ந்துவிடும். மற்ற நாட்களில் இங்கிருந்து சென்னை, காஞ்சிபுரம், பெங்களூரு, வேலூர், மதனபள்ளி ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

வெயில் அதிகரிக்கும்போது, மல்லிகை விளைச்சலும் அதிகமாக இருக்கும். மழைக்காலத்தில் விளைச்சல் குறையும். தற்போது, கோடை வெயில் கொளுத்தி வருவதையடுத்து, மல்லிகை வரத்து அதிகரித்துள்ளது.

திருத்தணி சந்தைக்கு, நாளொன்றுக்கு, நான்கு டன் மல்லிகை வந்து இறங்குகிறது. முகூர்த்த நாட்கள் இல்லாததால், பூக்கள் தேக்கம் அடைகின்றன. இதையடுத்து, குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. இனிவரும் நாட்களில், வெயில் அதிகரிக்கும் பட்சத்தில், மேலும் விலை

குறையும் என, வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து, தும்பிகுளத்தைச் சேர்ந்த மல்லிகை விவசாயி கோபால் கூறுகையில், ""பூ பறிக்க ஒருவருக்கு, 100 ரூபாய் கூலி கொடுக்கிறோம். பூக்களை திருத்தணிக்கு இருசக்கர வாகனத்தில் கொண்டு வருகிறோம். பறிப்பு கூலி மற்றும் பெட்ரோல் செலவு கூட எங்களுக்கு கிடைப்பதில்லை" என்றார்.

## நடப்பு பருவத்தில் மாங்காய் விளைச்சல் சரிவு பூக்கள் கொட்டியதால் கடும் பாதிப்பு

இடைக்கழிநாடு:நடப்பாண்டு பருவத்தில், மாம்பூக்கள் அதிகமாக கொட்டிவிட்டதால், மாங்காய் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு, பருவமழை குறைவு, பனி பொழிவு ஆகியவை காரணங்கள் என்றாலும், மா விவசாயிகளின், பராமரிப்பு குறைவும் ஒரு காரணம் என, தோட்டக்கலை துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். செய்யூர் வட்டத்திற்கு உட்பட்டது, இடைக்கழிநாடு பேரூராட்சி. இப்பேரூராட்சியில் வெண்ணாங்குபட்டு, கோட்டைகாடு, நல்லூர், வேம்பனூர், பூத்தோட்டம், கரும்பாக்கம், கடப்பாக்கம், பனையூர், முதலியார்குப்பம், நைனார்குப்பம் உட்பட, 24 கிராமங்கள் உள்ளன. பல ரகங்கள் கடற்கரையோரம் உள்ள குப்பங்கள் தவிர, அனைத்து இடங்களிலும், ருமானி, பெங்களூரா, நீலம், இமாம்பசந்த், மல்கோவா, பங்கனபள்ளி, செந்தூரா, நாட்டுக்காய் என, பல்வேறு ரக மா மரங்கள் உள்ளன. மா மரங்கள், ஜனவரி மாதம் பூக்கத் துவங்கும். அதிலிருந்து பராமரிப்பு பணிகளை ஆரம்பிக்க வேண்டும். பூ பூக்க துவங்கியதும், மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அதன் பின், எருவிட்டு பராமரிக்க வேண்டும். பூக்கள் பூக்க, காய் காய்க்க என, தனித்தனியே மருந்து அடிக்க வேண்டும். ஏப்ரல், மே மாதங்களில், காய்கள் அறுவடைக்கு வரும். இப்பகுதியில் விளையும் மாங்காய்கள், சென்னை, கோயம்பேடு மார்க்கெட்டிற்கு அனுப்பப்படுகின்றன. இந்நிலையில், இவ்வாண்டு மழை போதிய அளவு இல்லாததால், மாங்காய் விளைச்சலில் சரிவு ஏற்பட்டு உள்ளது. விலை அதிகரிக்கும்...இதுகுறித்து, வெண்ணாங்குபட்டு கிராமத்தைச் சேர்ந்த, ரவிக்குமார் கூறியதாவது: இந்த ஆண்டு, 6 ஏக்கர் மாந்தோப்பை, ஒரு ஆண்டிற்கு, 1.80 லட்சம் ரூபாய் என பேசி, குத்தகைக்கு எடுத்துள்ளேன். கடந்த ஆண்டு, 1 டன் இமாம்பசந்த், 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை

விற்றோம். பங்கனபள்ளி, 1 டன் 15 ஆயிரமும், பெங்களூரா, 1 டன் 4,000, நீலம், 1 டன் 6,000 ரூபாய் என விற்பனை செய்தோம். 1 கிலோ, 20 ரூபாயிலிருந்து 30 ரூபாய் வரை, விற்பனை செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு நல்ல விளைச்சல் இருந்ததால், லாபம் நிறைய கிடைத்தது. கடும் வெயில் வாட்டுவதால், பிஞ்சுகள் கொட்டி விடுகின்றன. இதனால், விளைச்சல் குறையும் அபாயம் ஏற்பட்டு, விலை அதிகரிக்கும், சூழ்நிலை உருவாகி உள்ளது. இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

ஈரப்பதம் அவசியம்

இதுகுறித்து, தோட்டக்கலை துறை இணை இயக்குனர் கோமதியிடம் கேட்டபோது, ""மா சாகுபடி குறைந்ததற்கு மழை குறைவும், கடுமையான பனிப் பொழுவும் காரணம். அதே வேளையில், பல விவசாயிகள், பூ பூக்கும் பருவத்தில், பூக்கள் கொட்டாமல் இருக்க, தேவையான முன்னேற்பாடுகளை செய்யாததும், ஒரு காரணமாகிறது," என்றார்.
மேலும் அவர் கூறுகையில், ""மா பூக்கும் நேரத்தில், ஈரப்பதம் அவசியம். அப்போது தான், பூக்கள் கொட்டாமல், காம்புடன் இறுகும். இதனால், பூக்களும், பிஞ்சுகளும் கொட்டாது. குறிப்பிட்ட பகுதிகள் மணல் பாங்கானவை என்பதால், நீர் பாய்ச்சியதும், உறிஞ்சுக் கொள்ளும். ஈரப்பதத்தை தக்க வைத்துக் கொள்ளும் அளவிற்கு, அவ்வப்போது நீர் பாய்ச்சியிருந்தால், பூக்கள் கொட்டுவது குறைந்து, விளைச்சல் அதிகமாகி இருக்கும்," என்றார்.

## கால்நடை தீவனப்பயிர் வளர்க்க மானியம்

காஞ்சிபுரம்:கால்நடை தீவனப் பயிர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 100 சதவீதம் மானியத்தில், தீவனப் புல் வளர்க்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.
தமிழக அரசு சார்பில், விலையில்லா ஆடு மற்றும் கறவை மாடுகள் வழங்கப்படுகிறது. தற்போது, மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஏரிகள் வறண்டு காணப்படுகின்றன. விவசாய நிலங்களின் பரப்பளவு குறைந்துள்ளது. இதனால், கால்நடைகளுக்கு தீவனம் குறைந்து விட்டது.
கால்நடைகளுக்கு, பால்வளம் பெருக்க கூடிய கம்பு, நேப்பியர் ஒட்டுப்புல் ரகம் கோ-3 அல்லது கோ-4 உடன் முயல் மசால் அல்லது வேலி மசால், தானிய வகை தீவனப் பயிரான மக்காச்சோளம் போன்றவற்றுடன், அதிக புரத சத்து நிறைந்த, தீவன வகை தட்டைப்பயறு, போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இதன் மூலம் கறவை மாடுகளின் பால் உற்பத்தியை பெருக்கலாம்.
இதற்காக மாவட்டம் முழுவதும் 50 ஏக்கர் பரப்பளவில், தீவனப் பயிர் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு விவசாயிக்கு, 25 சென்ட் நிலம் இருந்தால் போதும். இந்த நிலத்தில் தீவனப் பயிர் பயிரிட, புல் விதை மற்றும் பண்ணை அமைப்பதற்காக, களை நிர்வாகம் மற்றும் தொழு உரம் வாங்க, 1,600 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

ஒரு ஏக்கராக இருந்தால், 6,400 ரூபாய் வழங்கப்படுகிறது. தீவனப் பயிர் பயிரிடும் விவசாயிகள், சம்பந்தப்பட்ட கால்நடைத் துறை உதவி இயக்குனர் அலுவலகத்தை அனுகி, தீவனப் புல் வளர்க்க விண்ணப்பங்கள் பெறலாம்.

இது குறித்து, கால்நடைத்துறை உதவி இயக்குனர் ராஜன் சி ஆண்டனி கூறுகையில், ""தற்போது கால்நடைத்துறை சார்பில், கோ 1, கோ 2, கோ 3 ஆகிய ரக தீவனப் புல் விதைகள் வழங்கப்படுகிறது. இவற்றை பராமரிக்க, 100 சதவீதம் மானியம், அரசு வழங்குகிறது. பயன்பெற விரும்பும் கால்நடை விவசாயிகள் சம்பந்தப்பட்ட கால்நடை துறை உதவி இயக்குனர்களை அணுகி, தீவன வளர்ப்பில் புல் வகையை பயிரிடலாம்," என்றார்.

தீவனப் புல் பயிரிடுவதற்கு கோட்டங்கள் வாரியாக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்கள் விவரம்

கோட்டம் தீவனப் பயிர் பரப்பு

காஞ்சிபுரம் 20 ஏக்கர் செங்கல்பட்டு 10 ஏக்கர் மதுராந்தகம் 20 ஏக்கர்

## வெயிலுக்கு வெடிக்கும் வெள்ளரி பழங்கள் விவசாயிகளுக்கு நஷ்டம்

காஞ்சிபுரம்:கடும் வெயில் காரணமாக,

அறுவடைக்கு தயாரான வெள்ளரி பழங்கள், நிலத்திலேயே வெடித்து விடுவதால், நல்ல விலைக்கு விற்க முடியாமல்,

விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

அறுவடை

காஞ்சிபுரம் மாவட்டத்தில், வெள்ளரி பழம் சாகுபடி பரவலாக செய்யப்பட்டு வருகிறது. கடந்த, பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் நடவு செய்யப்பட்ட வெள்ளரி, தற்போது அறுவடைக்கு தயாராகிவிட்டது.

ஒவ்வொரு செடியிலும், ஏழு முதல் 10 பழங்கள் பழுக்கின்றன. இவற்றை

அறுவடை செய்து, நகரம் மற்றும்

முக்கிய சாலையோரங்களில், விவசாயிகள் விற்பனையை துவக்கியுள்ளனர்.

இதுகுறித்து, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த விவசாயி ஆறுமுகம் கூறியதாவது:

போந்தவாக்கம் கிராமத்தில், விவசாயி ஒருவர், ஒரு ஏக்கரில் பயிரிட்ட வெள்ளரி தோட்டத்தை, 50 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கினேன். இது நல்ல விளைச்சலை கொடுத்துள்ளது.

நாட்டு ரக வெள்ளரி பழம் என்பதால், சுவையாக உள்ளது. கடந்த மூன்று நாட்களாக, செடியில் <<உள்ள பழங்களில், 50 சதவீத பழங்கள் பழுத்துவிட்டன. இவற்றை, ஒரே நேரத்தில் விற்பனைக்கு எடுத்து செல்ல முடியவில்லை.

நஷ்டம்

செடியிலே விடப்பட்ட பெரும்பாலான பழங்கள், கடும் வெயிலின் தாக்கத்தால் வெடித்துவிட்டன. இவற்றை விற்பனைக்கு எடுத்து சென்றால், பாதி விலைக்குத்தான் கேட்கின்றனர்.
அந்த விலைக்கும் விற்கவில்லை
என்றால், மேலும் நஷ்டத்தை சந்திக்க வேண்டி இருக்கும் என்பதால், வந்த விலைக்கு விற்று வருகிறோம்.
மீதமுள்ள பழங்களை ஒரு நாள் முன்னதாகவே அறுத்து சென்று, காற்றோட்ட முள்ள நிழலில் வைத்து, பிறகு விற்பனைக்கு எடுத்து செல்ல முடிவு செய்துள்ளேன். இவ்வாண்டு, கடும் வெயிலால், நாங்கள் நஷ்டத்தை சந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளோம்.
இவ்வாறு, விவசாயி ஆறுமுகம்
தெரிவித்தார்.

## மணக்கும் மல்லிகை, மயக்கும் விலை 320 ரூபாய் ஏலம்; விவசாயிகள் மகிழ்ச்சி

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்டம் நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, முத்தனூர், கவுண்டன்புதூர் மற்றும் வேலாயுதம்பாளையம், பொன்மலர்பாளையம், செல்லப்பம் பாளைய ம், தண்ணீர்பந்தல், நகப்பானையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் குண்டுமல்லி, முல்லை, சம்பங்கி, சாமந்தி, அரளி, செவ்வந்தி, துளசி, கோழிக்கொண்டை, ஆடா தொடை போன்ற பல்வேறு வகையான பூக்கள் வகை செடிகளை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.
இந்த பகுதிகளில் விளையும் பூ வகைகளை உள்ளூர் வியாபாரிகளுக்கும், வேலாயுதம்பாளையம் அருகே வேலூரில் உள்ள மலர் ஏல மண்டிக்கும், தனியார் பூ ஏல மண்டிக்கும் கொண்டு விவசாயிகள் விற்பனை செய்கின்றனர்.
இங்கு தினமும் காலை 11 மணி முதல் ஏலம் நடக்கிறது. ஏலம் எடுப்பதுக்கு நொய்யல், வேலாயுதம்பாளையம், கொடுமுடி, வேலூர், நாமக்கல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான வியாபாரிகள் வருகின்றனர். அவர்கள் தங்களுக்கு கட்டுப்படியாகும் விலைக்கு ஏலம் கேட்கின்றனர்.
கிராமப்புறங்களுக்கு தினமும் சென்று விற்பனை செய்யும் சில்லறை வியாபாரிகளுக்கு, பூக்களின் தேவை அதிகரித்துள்ளது. தற்போது திருவிழா மற்றும் கும்பாபிஷேகம் போன்ற கோவில் விசேஷங்களுக்கும், திருமண வைபவங்களுக்கும் அதிகளவில் பூ தேவைப்படுகிறது. இவைகளுக்கு ஒரு மங்கல பொருளாக "பூ' இருப்பதால், இதன் தேவை பலமடங்கு உயர்த்து வருகிறது.
ஆனால், இப்போது நிலவும் வறட்சியின் காரணமாக பூக்கள் உற்பத்தி விழ்ச்சியடைந்து, அதன் வரத்து பெருமளவில் குறைந்து வருகிறது. இதனால் வியாபாரிகளின் தேவைக்கு ஏற்ப பூக்கள் கிடைக்காததால், இதன் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.
சமீபத்தில் நடந்த பூ ஏலத்தில், கிலோ 160 ரூபாயாக இருந்த மல்லிகை 320க்கும், 140 ரூபாயாக இருந்த சம்பங்கி, 200 ரூபாய்க்கும், 100 ரூபாயிலிருந்து முல்லை 320 ரூபாய்க்கும், பட்டுப்பூ 60

ரூபாய் விற்கப்பட்டது.
மேலும் 100 ரூபாயாக இருந்த பெரிய மாலை 250 முதல் 300 ரூபாய், 50 ரூபாயாக இருந்த சிறிய மாலை 80 ரூபாய்க்கும், துளசி கட்டு 4 ரூபாய்க்கும், ஆடாதொடை ஒரு கட்டு, 3 ரூபாய்க்கும், கோழிக்கொண்டை ஒரு கட்டு 4 ரூபாய்க்கும், ஏலம் போனது. கடந்த வாரங்களை விட்டு சற்று அதிகமாக ஏலம் போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
இது குறித்த பூ வியாபாரிகள் கூறியதாவது:
பருவமழை பொய்த்ததால், பல்வேறு பகுதிகளிலும் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. மேலும் கோடை துவங்கியுள்ள நிலையில், போதுமான அளவு பாசனம் இன்றி, பூக்கள் கருகி, வீணாகி விடுகின்றன. இதனால், நொய்யல், புகளூர் சுற்றுப்பகுதிகளிள் மட்டுமின்றி ப.வேலூர் பகுதிகளில் பூக்கள் வரத்து குறைந்துகொண்டே இருக்கிறது. இதனால் பூக்களின் விலை தொடர்ந்து அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.
இவ்வாறு அவர் கூறினர்.

## உளுந்து , பாசிப்பயிறு அறுவடை உடனே விற்றால் நல்ல லாபம்

வேலாயுதம்பாளையம்: "அறுவடை முடிந்தவுடன் உளுந்து மற்றும் பாசிப்பயிற்றை விற்றால் விவசாயிகள் லாபம் பெறலாம்' என தமிழ்நாடு வேளாண் பல்கலை உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குனர் அஜ்ஜன் கூறினார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
இந்தியாவில் முக்கிய பயிறு வகைகளான உளுந்து, பாசிப்பயறு வேளாண்மையில் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. கடந்த, 2011-12ம் ஆண்டு கணக்கீட்டின் படி இந்தியாவில் உளுந்து உற்பத்தி, 1.83 மில்லியன் டன்னாகவும், பாசிப்பயிறு உற்பத்தி, 1.81 மில்லியன் டன்னாகவும் இருந்தது. இந்தியாவில் ஆந்திரபிரதேசம், உத்திரபிரதேசம், தமிழ் நாட்டில் உளுந்து உற்பத்தி செய்யப்படுகிறது.
கடந்தாண்டு உற்பத்தி, 98 ஆயிரத்து, 712 டன்னாகும். இதில், தமிழ் நாட்டில் பாசிப்பயிறு உற்பத்தி 47ஆயிரத்து, 673 டன்னாகும். ஏப்ரல், மே மாதங்களில் உளுந்து மற்றும் பாசிப்பயிறு விலை குறித்து அறிய விவசாயிகள் ஆவலாக உள்ளனர்.
இதற்கு உதவும் வகையில் விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனை கூடம் விலைகளை ஆராய்ந்தது. விலை ஆய்வு மற்றும் சந்தை ஆய்வு முடிவின் அடிப்படையில் ஏப்ரல், மே மாதங்களில் உளுந்து கிலோ .8.40 ரூபய்க்கும், பாசிப்பயிறு விலை கிலோவுக்கு 48.50 ரூபாய்க்கும் விற்பனை செய்ய வாய்ப்புள்ளது.
எனவே, இரண்டு மாதங்களுக்கு விலை ஏற வாய்ப்பு குறைவு என்பதால், விவசாயிகள் தங்களிடம் உள்ள உளுந்து மற்றும் பாசிப்பயிறை அறுவடை செய்தவுடன் விற்பனை செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

## தோட்டக்கலை பரிந்துரைக்கும் விவசாயிக்கு மானியம்

குன்னூர்:"தோட்டக்கலை துறை பரிந்துரைக்கும் விவசாயிகளுக்கு மானியத்திட்ட உதவிகளை தேயிலை வாரியம் வழங்கு
கிறது' என தெரிவிக்கப்பட்டது.
குன்னூரில் தேயிலை வாரியம் மற்றும் தோட்டக்கலை துறையின் தொழிற்நுட்ப கூட்டம் நடந்தது.
மாவட்ட தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் மோகன் தலைமை வகிதது பேசுகையில்,
""நீலகிரியில் மலை தோட்ட காய்கறி விவசாயம், தேயிலை, காபி உள்ளிட்ட விவசாயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
27 ஆண்டுகளுக்கு பின்னர், இந்த கூட்டத்தில் தேயிலை வாரியமும் பங்கேற்றுள்ளது. வாரியம் சார்பில் விவசாய தொழிலை மேம்படுத்த உதவிகள் வழங்க வேண்டும்," என்றார்.
தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசுகையில்,
""தேயிலை விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை தேயிலை வாரியம் வழங்கி வருகிறது.
தேயிலை செடிகள் நடவு மற்றும் மறு நடவு ஆகியவற்றிற்கு மானியம் வழங்கப்படுகிறது.
தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்க கவாத்து மற்றும் இலை பறிக்கும் இயந்திரமும் மானிய விலையில் வழங்கப்படுகிறது.
வறட்சி நிவாரண உவிகள், தோட்டக்கலை துறை சார்பில் பரிந்துரைக்கப்படும் விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கப்படுகிறது. இதனை மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தி கொள்ள வேண்டும்," என்றார்.
கூட்டத்தில், உபாசி வேளாண் நிலைய விஞ்ஞானி டாக்டர் ராமமூர்த்தி, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர் செல்வராஜ், உதவி இயக்குனர் பிரகாசம் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

## மக்காச்சோளம் கிலோவுக்கு ரூ.2 உயர்வு கேரளாவில் தேவை அதிகரிப்பால் வரவேற்பு

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் மக்காச்சோளம் அறுவடை விறுவிறுப்பாக நடக்கிறது. கடந்தாண்டை விட மக்காச்சோளத்துக்கு கூடுதல் விலை கிடைப்பதால், மக்காச்சோளம் பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
தமிழகத்தில் பல்லடம் மற்றும் நாமக்கல் பகுதிகளில் ஆயிரக்கணக்கான கோழிப்பண்ணைகள் உள்ளன. கோழிகளுக்கு வழங்கப்படும் தீவன பொருளில் மக்காச்சோளத்துக்கு முக்கிய இடம் உண்டு.
மக்காச்சோளத்துடன், கருவாடு மற்றும் புரோட்டின் கலந்த தீவனமாக கோழிகளுக்கு வழங்கப்படுகிறது. தமிழகத்தில் திண்டுக்கல், கோவை, கரூர், புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூர்

மாவட்டங்களில் அதிகளவில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், 5,000 முதல், 7,000 ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டன. ஆண்டுக்கு சராசரியாக, 30 ஆயிரம் டன் முதல், 50 ஆயிரம் டன் வரை மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்படுகிறது.

தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் நெல், கரும்பு, வாழை போன்றவை சாகுபடி குறைந்து விட்டது.

இதனால், கிணற்று பாசனம் மூலம் மக்காசோளம் அதிகளவில் பயிரிட்டுள்ளனர். கோபி சுற்று வட்டாரத்தில் மக்காச்சோளம் அறுவடை பணி நடக்கிறது.

சென்றாண்டு மக்காச்சோளத்துக்கு கிலோ, 12 முதல், 13.50 ரூபாய் வரை கிடைத்தது.

நடப்பாண்டு ஒரு கிலோ, 15 முதல், 15.50 ரூபாய் வரை கிடைக்கிறது.

கோழித்தீவனத்துக்கு மக்காசோளம் தேவை அதிகரிப்பால், மக்காசோளம் விலை சென்ற ஆண்டைவிட நடப்பாண்டு இரண்டு ரூபாய் வரை உயர்ந்துள்ளது, விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மக்காசோள உற்பத்தியாளர்கள் கூறியதாவது:

தமிழகத்தில் கோவை மாவட்டம் பல்லடம், ஈரோடு, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஏராளமான கோழிப்பண்ணைகள் உள்ளது. கோ 1 சுவான் ரகம் கோவை, ஈரோடு, சேலம், கரூர், பெரம்பலூர், திண்டுக்கல், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் இறவை மற்றும் மானாவரி பருவத்தில், மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது.

கோழிகளுக்கான உணவில் புரச்சத்து அதிகம் உள்ள மக்காச்சோளம் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் பொதுமக்களும் மக்காச்சோளத்தை உணவாகவும் பயன்படுத்தி வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் கோபி, டி.என்.பாளையம் மற்றும் நம்பியூர் வட்டாரத்தில் நடப்பு சீசனில் அதிகளவில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டது.

தமிழகத்தில் கோழி தீவனமாகவும், உணவாகவும் பயன்படும் மக்காச்சோளம், கேரளா மாநிலத்தில் முக்கிய உணவாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கோபி வட்டாரத்தில் நம்பியூர், சிறுவலூர், குருமந்தூர், கடத்தூர், கொளப்பலூர் உள்ளிட்ட பகுதிகளிலும், டி.என்.பாளையம் வட்டாரத்தில் கள்ளிப்பட்டி, துறையம்பாளையம், கணக்கம்பாளையம், பங்களாப்புதூர் பகுதிகளிலும் மக்காச்சோளம் அறுவடை தற்போது தொடங்கியது.

கோபி வட்டாரத்தில் விளையும் மக்காச்சோளம் கேரளா மாநிலத்துக்கு அதிகளவில் அனுப்பபடுகிறது. நடப்பு சீசனில் மக்காச்சோளத்துக்கு கிலோவுக்கு இரண்டு ரூபாய் வரை கூடுதல் விலை கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ந்துள்ளனர், என்றார்.

## இலவச கால்நடை சிகிச்சை முகாம்

ஓசூர்: ஓசூர் அடுத்த ஜோனபெண்டா கிராமத்தில், ரோட்டரி கால்நடை பராமரிப்பு துறை சார்பில் இலவச கால்நடைகள் சிகிச்சை முகாம் நடந்தது.
கால்நடை துறை உதவி இயக்குனர் ராஜசேகரன், தலைமை வகித்து, முகாமை துவக்கி வைத்தார். ரோட்டரி கிளப் தலைவர் வாசுதேவன் வரவேற்றார். ஒன்னல்வாடி, ஜோனபெண்டா, ஓசூர் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் தங்கள் கால்நடைகளை சிகிச்சைக்கு அழைத்து வந்தனர். முகாமில், 280 கால்நடைகளுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.
கால்நடை மருத்துவர்கள் அபிராமி, வித்யா மற்றும் மருத்துவ குழுவினர், கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.
வெயில் காலத்தில் ஆடு, மாடு, நாய்கள் உள்ளிட்ட கால்நடைகளுக்கு வரும் புட் அன்ட் மவுத் நோய்க்கு தடுப்பு மருந்து ஊசி, ஊட்டச்சத்துகள் வழங்கப்பட்டன. சிறப்பாக பராமரித்த கால்நடைகளை தேர்வு செய்து, அந்த கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகளுக்கு ரோட்டரி கிளப் பரிசு வழங்கியது.
ஒன்னல்வாடி பஞ்சாயத்து தலைவர் மாதம்மா பீரப்பா, கவுன்சிலர் சுரேஷ், ரோட்டரி கிளப் நிர்வாகிகள் சிவண்ணா, சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## முட்டைக்கோசை நாசப்படுத்தும் யானைகள் தென்பெண்ணை விவசாயிகள் கடும் விரக்தி

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இரு ஆண்டாக பருவமழைகள் பொய்த்து போனதால் கடும் வறட்சி நிலவி வருகிறது. வனப்பகுதியில் உள்ள, காட்டாறுகள், ஏரிகள் வறண்டதால், யானைகள், சிறுத்தை புலிகள், காட்டெருமைகள், புள்ளி மான்கள், அடிக்கடி மலைக்கிராமங்களுக்கு தண்ணீர், உணவு தேடி படையெடுக்கின்றன.
மாவட்டத்தில், தென்பெண்ணை ஆற்றில் மட்டும், ஓரளவு தண்ணீர் ஓடுகிறது. இதையறிந்த யானைகள் கூட்டம், தென்பெண்ணை ஆற்றுக்கு படையெடுத்து வருகின்றன. கடந்த மாதம், 35 யானைகள், தென்பெண்ணை ஆற்றுக்கு வந்தன. அவற்றில், 30 யனைகளை வனத்துறையினர் பெரும்பாடு பட்டு, தேன்கனிக்கோட்டை காப்பு காட்டிற்கு விரட்டினர்.
நான்கு யானைகள், ஓசூர் அருகே தென்பெண்ணை ஆற்றங்கரை ஓரமுள்ள அழியாளம், போடூர் மலைக்கிராமங்களில், ஒரு மாதமாக முகாமிட்டுள்ளன. மற்றொரு, ஒற்றை பெண் யானை, சூளகிரி அருகே தீர்த்தம் மலைக்கிராமத்தில், தனியாக சுற்றித்திரிகிறது.
போடூர் பள்ளத்தில் முகாமிட்டுள்ள, ஒரு மாக்கான் யானை, இரு பெண் யானை உள்ளிட்ட, நான்கு யானைகள், தினசரி இரவு நேரத்தில் அழியாளம், போடூர் மலைக்கிராமங்களில் புகுந்து, கரையோர விவசாய நிலங்களில், விவசாயிகள் சாகுபடி செய்த முட்டைக்கோஸ் பயிர்களை

தின்றும், காலால் மிதித்தும் நாசப்படுத்தி செல்கின்றன.
தற்போது, தென்பெண்ணை ஆற்று கரையோர விவசாய நிலங்களில் பெரும்பாலும் விவசாயிகள், முட்டைக்கோஸ் சாகுபடி செய்துள்ளனர். தக்காளி செடிகளை தற்போதுதான் நடவு செய்துள்ளனர். யானைகள், இரவு முழுவதும், அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள முட்டைக்கோசை சாப்பிட்டு நாசப்படுத்திவிட்டு, தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் குடித்துவிட்டு, மீண்டும், போடூர் பள்ளத்துக்கு சென்று விடுகின்றன. இதனால், விவசாயிகள், அறுவடை காலத்திற்கு முன் முட்டைக்கோசை அறுவடை செய்யத் துவங்கியுள்ளனர். யானைகள் முகாமிட்டுள்ள போடூர் பள்ளம் வனப்பகுதி பள்ளத்தாக்கு பகுதி என்பதால், ஒரு மாதமாக, வனத்துறையினர் அங்கிருந்து யானைகளை விரட்ட முடியாமல் பரிதவித்து வருகின்றனர்.

## விவசாயிகள் சங்கம் சார்பில் கிராமங்களில் பொதுக்கூட்டம்

கிருஷ்ணகிரி: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், கிருஷ்ணகிரி அடுத்த கரடிக்கல், மாடக்கல், கொல்லப்பள்ளி, ஒசதொட்டி ஆகிய கிராமங்களில், கொடியேற்று விழா மற்றும் பொதுக்கூட்டம் நடந்தது.
மேற்கு மாவட்ட தலைவர் கோணப்பன் தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் மாரியப்பன், ஒன்றிய தலைவர் பசவன், கிளை நிர்வாகிகள் சிவராஜ், லட்சுமணன், முனி நஞ்சப்பா, திம்மப்பா, ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒசதொட்டி கிளை தலைவர் மாரேகவுடு வரவேற்றார். மாநில பொது செயலாளர் ராமகவுண்டர் முன்னிலை வகித்தார்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அஞ்செட்டியை தலைமையிடமாக கொண்டு ஒரு புதிய யூனியனும், போச்சம்பள்ளியை தலைமையிடமாக கொண்டு, ஒரு புதிய யூனியனும் அமைக்க உத்தரவிட்ட, தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிப்பது, காட்டு யானைகளாலும், காட்டுப்பன்றிகளாலும் அழிக்கப்பட்ட பயிர்களுக்கு, ஒரு ஏக்கருக்கு, 50 ஆயிரம் ரூபாய் இழப்பீடும், மனித உயிர் இழப்புக்கு, 10 லட்ச ரூபாயும் இழப்பீடு வழங்க வேண்டும்.
வறட்சியின் காரணமாக விவசாயம் மற்றும் அதனை சார்ந்த வங்கி கடன்கள் அனைத்தையும் மத்திய, மாநில அரசுகள் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். ஒரு லிட்டர் பாலுக்கு, 30 ரூபாயும், உற்பத்தி மானியமாக, ஐந்து ரூபாயும் வழங்க வேண்டும். தனியார் பாலை, கடத்தல் என்று மிரட்டி பறிமுதல் செய்வதை, மாவட்ட நிர்வாகம் கைவிடவேண்டும்.
விவசாயம் செய்ய உற்பத்தி மானியமாக , ஒரு ஏக்கருக்கு, 50 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு, அரசு வழங்க வேண்டும், என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.
மத்திய மாவட்ட தலைவி பெருமா, மேற்கு மாவட்ட தலைவர் வண்ணப்பா, பொருளாளர் சுப்பிரமணிரெட்டி, மத்திய மாவட்ட பொருளாளர் அசோக்குமார், செயலாளர் வெங்கடேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகள் ஒப்புதல் பிளவக்கல் அணை நீர் பகிர்வு

வத்திராயிருப்பு: வாடும் பயிர்களை காக்க, பிளவக்கல் அணை நீரினை திறக்க, பல கண்மாய்களின் விவசாயிகள் கோரிவருகின்றனர். எந்த கண்மாயிக்கு எவ்வளவு நீர் திறப்பது என்பது குறித்து, பொதுப்பணித்துறை அதிகாரிகளும் விவசாயிகளும் கலந்தாய்வு செய்தனர். அதிகாரிகளின் நீர்பகிர்வு முறைக்கு,தற்போது விவசாயிகள் ஒப்புதல் தெரிவித்தனர்.கோடை சாகுபடி செய்துள்ள நெல்விவசாயிகள், வாடும் நெற்பயிர்களை காக்க, பிளவக்கல் அணையிலிருந்து நீரை திறந்து விட வேண்டும் என, அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர். கண்மாய் விவசாயிகளோ கண்மாய்க்கு நீர் வேண்டும் என கேட்டு வருகின்றனர். மிக குறைந்த அளவு நீரே அணையில் இருப்பு உள்ளதால், இதை யாருக்கு திறப்பது என, பொதுப்பணித்துறை அதிகாரிகள் குழப்பமடைந்தனர். அனைவரின் நீர் தேவை குறித்து அறியவும், தற்போதைய அணையின் நீர் இருப்பு குறித்தும் தெரிவிக்கவும், வத்திராயிருப்பு பொதுப்பணித்துறை அலுவலகத்தில் விவசாயிகள், அதிகாரிகள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது. பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ராமசுப்பு தலைமை வகித்தார். பூரிப்பாறைகுளம், குணவந்தநேரி, சீவனேரி கண்மாய்களின் பாசன விவசாயிகள், அதன் சங்க தலைவர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தற்போது அணையில் உள்ள 62.27 மில்லியன் கனஅடி நீரில் ,மீன் வளர்ப்புக்கு தேவையான 7.54 மில்லியன் கனஅடி நீர் திறக்கப்பட்டால், கண்மாய்களுக்கு செல்லும் ஆறு, ஓடைகளில் நீர் உறிஞ்சுவதால் ஏற்படும் சேதாரம் 20 சதவீதம் போக, மீதமுள்ள 43.74 மில்லியன் கனஅடி நீர் மட்டுமே திறந்து விடப்படும். அவை 3 கண்மாய்களுக்கும் பிரித்து தரப்படும். இவை அனைத்தும் கலக்டர் அனுமதி கிடைத்தால் மட்டுமே திறக்கப்படும், என தெரிவித்தனர். உதவிப்பொறியாளர் ரவிக்குமார் நீர்பகிர்வுக்கான ஒப்பந்த ஷரத்துகளை கூறினார். விவசாயிகளும் ஏற்றுக்கொண்டு, நீர்பகிர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். தற்போதைய நிலவரப்படி பிளவக்கல் பெரியாறு அணையில் 28.54 கனஅடி, கோவிலாறு அணையில் 10.24 அடி நீர் இருப்பு உள்ளது.

## ஒரு கிலோ பீன்ஸ் ரூ.80

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் நேற்று ஒருகிலோ பீன்ஸ்சின் அதிக பட்ச விலை ரூ.80 க்கு விற்கப்பட்டது. காய்கறி மார்க்கெட்டிற்கு சாதா பீன்ஸ், முருங் கை பீன்ஸ் மற்றும் ஜெர்மன் பீன்ஸ் எனப்படும் மூன்று வகையான பீன்ஸ் விற்பனைக்கு வருகிறது. இவை வடகாடு, கே.சி. பட்டி, பண்ணைக்காடு உள்ளிட்ட மலைப் பகுதிகளில் தான் அதிகமாக விளைவிக்கப்படுகிறது. நேற்று விற்பனைக்கு வந்த பீன்ஸ் ரகங்களின் விலை உச்சத்தில் காணப்பட்டது. இதற்கு முன்பு கிலோ 40 ரூபாய்க்கு விற்பனையான சாதா ரக பீன்ஸ் 50 ரூபாய்க்கும், ரூ.45 க்கு விற்ற முருங்கை பீன்ஸ் ரூ.50 முதல் 55 க்கும், ரூ.58 க்கு விற்ற ஜெர்மன்

பீன்ஸ் ரூ.70 முதல் ரூ.80 க்கும் விற்பனையானது. அவரைக்காய் கிலோ ரூ.50 க்கு விற்பனையானது.

## விருவீட்டில் காய்ந்து போனஅவரைக் கொடிகள்

விருவீடு:விருவீடு பகுதியில் அவரை கொடிகள் மழையில்லாமல் காய்ந்து போனதால், விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.விருவீடு, செக்காபட்டி, சாந்திபுரம், கீழ அச்சணம்பட்டி, தெப்பத்துப்பட்டி, நடகோட்டை ஆகிய பகுதிகளில் அவரை விவசாயம் நடக்கிறது. ஆண்டு தோறும் கோடை விவசாயமாக அவரை பயிரிட்டு லாபம் அடைவர். மதுரை, திருச்சி என வெளிமாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்புவர்.இந்த ஆண்டும் கடந்த மாதம் அவரை விவசாயம் செய்தனர். விதைத்த ஓரிரு வாரத்தில் இரண்டு நாட்கள் மழை பெய்தது. மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் தொடர் மழை இல்லாமல் அவரை கொடிகள் வாடத் துவங்கியதும் கவலையடைந்தனர்.இரண்டு மாதங்களாக மழை பொய்த்ததால், அவரைக் கொடிகள் முற்றிலும் காயந்துவிட்டது. விதைப்பதற்காக செலவு செய்த ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டம் அடைந்துள்ளது. வேளாண்துறையினர் நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**8.04.2013 A.M**

## மத்திய அரசு கட்டுப்பாட்டை கைவிட்டதால் சர்க்கரை விலை அதிகரிக்க துவங்கியது



சென்னை : சர்க்கரை மீதான விலை கட்டுப்பாட்டை மத்திய அரசு விலக்கி கொண்டதால், சர்க்கரை விலை அதிகரிக்க தொடங்கியுள்ளது. இனிப்பு பண்டங்களின் விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. சர்க்கரை மீதான விலை கட்டுப்பாடு மத்திய அரசின் வசம் இருந்தது. இந்த விலை கட்டுப்பாட்டை விலக்கி கொள்ள வேண்டும் என்று சர்க்கரை ஆலை அதிபர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதைத் தொடர்ந்து விலை கட்டுப்பாட்டை விலக்கி கொள்ள மத்திய அரசு முடிவு செய்தது. அதன்படி, கடந்த சில தினங்களுக்கு முன்னர் விலைக்கட்டுப்பாடு விதிப்பதை மத்திய அரசு விலக்கி கொண்டது. இனி மேல் சர்க்கரை விலையை ஆலைகளே தீர்மானித்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

மத்திய அரசுக்கு சர்க்கரை ஆலைகள் 10 சதவீதம் மானியத்தில் சர்க்கரையை அளித்து வந்தது. அதாவது, மத்திய அரசு சர்க்கரை ஆலைகளிடம் இருந்து 1 கிலோ சர்க்கரை ரூ.13.50 கொடுத்து வாங்கி வந்தது. விலை கட்டுப்பாடு விலக்கி கொள்ளப்பட்டதால், இனி கிலோ ரூ.32 கொடுத்து ஆலைகளிடம் இருந்து சர்க்கரையை மத்திய அரசு வாங்க வேண்டும். இதனால், சர்க்கரை ஆலைகள் மட்டுமே அதிகம் வளர்ச்சி பெறும்.

சர்க்கரை விலையை ஆலைகளே தீர்மானிக்கும் என்பதால் விலை அதிகரிக்கவும், நடுத்தர மக்கள்

மற்றும் ஓட்டல்கள், சுவிட்ஸ் ஸ்டால்கள் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இனிப்பு பொருட்களின் விலையும் அதிகரிக்கும். இன்னும் 2 அல்லது 3 மாதத்தில் மூட்டைக்கு ரூ.100 முதல் ரூ.200 வரை சர்க்கரை விலை உயர வாய்ப்புள்ளது என்றும் கூறப்படுகிறது.

கடந்த வாரம் 100 கிலோ எடை கொண்ட சர்க்கரை ரூ.3,030க்கு விற்கப்பட்டது. இது தற்போது ரூ.3,150க்கு விற்கப்படுகிறது. அதேபோல், சர்க்கரை 1 கிலோ ரூ.32 லிருந்து ரூ.33 ஆக அதிகரித்துள்ளது. சேலம் வெல்லம் ரூ.40 லிருந்து ரூ.48 ஆகவும், வேலூர் வெல்லம் ரூ.38 லிருந்து ரூ.46 ஆகவும், அச்சு வெல்லம் ரூ.50 லிருந்து ரூ.60 ஆகவும் விலை அதிகரித்துள்ளது.

மிளகாய், எண்ணெய் விலைகள் குறைவு: அதே நேரம் ராமநாதபுரம், விளாத்திகுளம், பரமக்குடி போன்ற பகுதிகளில் அதிக விளைச்சல் காரணமாக மிளகாய் விலை குறைய தொடங்கியுள்ளது. கடந்த வாரம் குண்டு மிளகாய் 1 கிலோ ரூ.110க்கு விற்றது, ரூ.95 ஆகவும், குண்டு மிளகாய் 2ம் ரகம் ரூ.100 லிருந்து ரூ.80 ஆகவும், நீட்டு மிளகாய் ரூ.90 லிருந்து ரூ.75 ஆகவும் விலை குறைந்துள்ளது. மலைப்பூண்டு ரூ.110 லிருந்து ரூ.90 ஆகவும், நாட்டுப்பூண்டு ரூ.70லிருந்து ரூ.55 ஆகவும், சின்ன பூண்டு ரூ.50 லிருந்து ரூ.35 ஆக விலை குறைந்துள்ளது. ராஜஸ்தானில் இருந்து கொத்தமல்லி இறக்குமதி செய்யப்படுகிறது. அங்கு விளைச்சல் பாதிப் பால் கொத்தமல்லி ரூ.70 லிருந்து ரூ.90 ஆக அதிகரித்துள்ளது.

மலேசியா, இந்தோனேசியா, உக்ரைன், தென் அமெரிக்கா, ரஷ்யா போன்ற வெளிநாடுகளில் இருந்து கப்பல் மூலமாக அதிக அளவில் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. இதனால், அவற்றின் விலையும் குறைய தொடங்கியுள்ளது. பாமாயில் 1 லிட்டர் பாக்கெட் ரூ.56லிருந்து ரூ.54 ஆகவும், சன் பிளவர் ஆயில் ரூ.88 லிருந்து ரூ.86 ஆகவும், கடலை எண்ணெய் ரூ.135 லிருந்து ரூ.125 ஆகவும், வனஸ்பதி ரூ.90 லிருந்து ரூ.80 ஆகவும், விளக்கு ஏற்றும் நல்லெண்ணெய் ரூ.100 லிருந்து ரூ.85 ஆகவும், தேங்காய் எண்ணெய் ரூ.110 லிருந்து ரூ.95 ஆகவும் விலை குறைந்துள்ளது.

துவரம் பருப்பு ரூ.72 லிருந்து ரூ.78 ஆகவும், துவரம் பருப்பு(2ம் ரகம்) ரூ.62 லிருந்து ரூ.70 ஆகவும், தான்சானியா துவரம் பருப்பு ரூ.60 லிருந்து ரூ.65 ஆகவும் அதிகரித்துள்ளது. மேலும், கடலைப்பருப்பு ரூ.60 லிருந்து ரூ.50 ஆகவும், கடலைப்பருப்பு (2ம் ரகம்) ரூ.50 லிருந்து ரூ.45

ஆகவும், வெள்ளை கடலை ரூ.70 லிருந்து ரூ.60 ஆகவும், வெள்ளை கடலை (2ம் ரகம்) ரூ.60 லிருந்து ரூ.50 ஆகவும் விலை குறைந்துள்ளது என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.

## வரத்து குறைவால் காய்கறி விலை உயர்ந்தது



சென்னை : பருவ மழை பொய்த்து விளைச்சல் குறைந்துள்ளதாலும், வரத்து குறைந்ததாலும் சென்னையில் காய்கறி விலை உயரத்தொடங்கியுள்ளது. பருவ மழை பொய்த்ததால் விவசாயம் முற்றிலுமாக பாதிக்கப்பட்டது. காவிரியில் உரிய நேரத்தில் தண்ணீர் வராததால் டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை ஏற்பட்டது. விவசாயம் பொய்த்த நிலையில் அரிசி விலை உயரத்தொடங்கியது. தற்போது காய்கறி விலையும் உயர தொடங்கியுள்ளது.

சென்னை கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டுக்கு திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், கோவை, ஊட்டி உள்ளிட்ட இடங்களி லிருந்தும், ஆந்திராவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் காய்கறி அதிக அளவு வருகின்றன. தற்போது இரு மாநிலங்களிலும் மழை இல்லாததால் காய்கறி விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் வரத்தும் குறைந்துள்ளது. தேவை அதிகம் உள்ள நிலையில், வரத்து குறைந்ததால் காய்கறிகளின் விலைகள் உயர்ந்துள்ளன. இதனால் மார்க்கெட்டுக்கு வந்த சிறு வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்றைய விலை விவரம் (கிலோவுக்கு):

பீன்ஸ் ரூ.40

உருளை ரூ.15

பெல்லாரி ரூ.18

கேரட் ரூ.28

நூல்கோல் ரூ.18

சவ்சவ் ரூ.15

கோஸ் ரூ.8

ப.மிளகாய் ரூ.15

இஞ்சி ரூ.80

சேப்பன் ரூ.32

சேனை ரூ.20

கத்தரி ரூ.8

வெண்டை ரூ.20

அவரை ரூ.25

பாகல் ரூ.20

முருங்கை ரூ.17

புடலை ரூ.12

தக்காளி ரூ.10

காலிபிளவர் ரூ.10

வெங்காயம் ரூ.35

கடந்த வாரம் பீன்ஸ் விலை கிலோ ரூ.25 வரையே விற்றது. நேற்று ரூ.40க்கு விற்கப்பட்டது. அதே போல ரூ.60ல் இருந்த இஞ்சி ரூ.80 க்கு தாவிவிட்டது. தேங்காய் விலையும் உயர்ந்து காணப்படுகிறது. விலை உயர்வால் நடுத்தர, ஏழை, எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## தேயிலைத்தூள் விலை கிலோவுக்கு ரூ.5 சரிவு



குன்னூர்: குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 14வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளியில் நடந்தது. மொத்தம் 10.27 லட்சம் கிலோ டீத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 7.58 லட்சம் கிலோ. 2.69 லட்சம் கிலோ டஸ்ட் ரகம். தேயிலை வரத்து அதிகரித்திருந்தும்கூட வர்த்தகர்கள் அதிகம் ஆர்வம் காட்டாததால் 72 சதவீதம் தேயிலைத்தூளே விற்பனையானது. கடந்த வாரத்தை போல் இந்த வாரமும் அனைத்து ரகத்துக்கும் கிலோவுக்கு ரூ.5 வரை சரிவு ஏற்பட்டது.

இலை ரகம் சாதா கிலோ ரூ.85 முதல் ரூ.89 வரையும், உயர் வகை ரூ.120 முதல் ரூ.155 வரையும் விற்றது. டஸ்ட் ரகம் சாதா ரூ.98 முதல் ரூ.101 வரையும், உயர்வகை ரூ.130 முதல் ரூ.165 வரையும் விற்றது. சிடிசி டஸ்ட் ரகத்துக்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.192ம், ஆர்த்தோடக்ஸ் ரகத்துக்கு ரூ.260ம் கிடைத்தது.

## உழவர் பெருவிழா ஆலோசனை கூட்டம்

நாமக்கல், : தமிழகத்தில் உள்ள கிராமங்களில் வரும் 14ம் தேதி முதல் தொடர்ந்து உழவர் பெருவிழா நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி, நாமக்கல் வட்டாரத்தில் உள்ள 32 கிராமங்களிலும் இந்த பெருவிழா நடத்த வேளாண்மை அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர். இதுதொடர்பான வட் டார அளவிலான ஆலோச னை கூட்டம் இன்று (8ம் தேதி) காலை 11 மணிக்கு நாமக்கல் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடக்கிறது. உதவி

இயக்குனர் ஜோ தேடியஸ் தலைமை வகிக்கிறார். இக்கூட்டத்தில் வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர்கள், கால்நடை பராமரிப்புத்துறையை சேர்ந்த மருத்துவர்கள், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையை சேர்ந்த உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொள்கிறார்கள்.

## மாவட்டத்தில் உழவர் பெருவிழா 365 கிராமங்களில் நடத்த ஏற்பாடு

ஈரோடு, : மாவட்டத்தில் உழவர் பெருவிழா 365 கிராமங்களில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விழா வரும் 14ம் துவங்குகிறது.

வேளாண்துறை சார்பில் நடப்பு 2013-14ம் ஆண்டு தமிழகத்தில் இரண்டாம் பசுமை புரட்சியை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. அதன்படி பிற துறைகளின் ஒத்துழைப்புடன் உழவர் பெரு விழா நடத்த முடிவு செய்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தை பொருத்தவரை 365 வருவாய் கிராமங்களில் நடப்பாண்டில் உழவர் பெருவிழா நடத்த வேளாண்துறை திட்டமிட்டு அதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் துறையினர் கூறியதாவது: வரும் ஏப்ரல் 14ம் தேதி சித்திரை முதல் நாளில் நடப்பாண்டிற்கான உழவர்பெருவிழா தமிழகம் முழுவதும் துவங்குகிறது. மே 20ம் தேதி வரையிலும் நடைபெற உள்ள உழவர் பெருவிழாவில் சிறிய அளவிலான கண்காட்சிகளும், கால்நடை பராமரிப்புத்துறை, கட்டுறவு சங்கங்கள், தோட்டக்கலைத்துறை, விதைச்சான்று, வேளாண் ஆராய்ச்சி நிலையம், விதை ஆய்வு, பட்டு வளர்ச்சித்துறை, மீன் வளத்துறை உள்ளிட்ட பல்வேறு துறையின் அரங்குகளும், இந்த துறைகளில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திட்ட விளக்கங்கள் தொடர்பாக தகவல்கள் இடம் பெறும். இத்தகவல்களை சேகரித்து கூடுதலாக இத்துறையில் தங்களை ஈடுபடுத்தி கொள்ள விவசாயிகள் முன்வர வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த உழவர் பெருவிழா நடத்தப்பட உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் 365 வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடைபெற உள்ளது. இத்திட்டத்திற்காக இதுவரை நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இருப்பினும், இதற்கான நிதி வசதி வேளாண்துறையிடம் உள்ளதால் அந்த நிதியை கொண்டு கடந்தாண்டு போலவே முதலில் செலவிட்டு பிறகு அரசிடம் இருந்து பெற்று கொள்ளப்படும்.

இவ்வாறு வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நச்சலூரில் விவசாயிகளுக்காக வேளாண் உற்பத்தியாளர் நிறுவனம் கலெக்டர் துவக்கி வைத்தார்

கரூர், : நச்சலூரில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் உற்பத்தியாளர் நிறுவனம் துவக்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டம் குளித்தலை தாலுகாவிற்குட்பட்ட நச்சலூர் ஊராட்சியில் வேளாண் உற்பத்தியாளர் நிறுவன தொடக்க விழா நபார்டு வங்கி சார்பில் நடைபெற் றது. மாவட்ட கலெக்டர் ஜெயந்தி வேளாண் உற்பத்தியாளர் நிறுவனத்தை துவக்கி வைத்து கூறுகை யில், மாவட்டத்தில் முதல்முறையாக விவசாயிகளே விவசாயிகளுக்காக ஒன்று சேர்ந்து இந்திய கம்பெனி சட்டத்தின்கீழ் நச்சலூர் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. உலகில் உள்ள உயிர்களின் பிரதான தேவை யான உணவை வழங்கிடும் விவசாயிகளுக்கு இத்தகைய நிறுவனங்கள் வரும் காலக்கட்டங்களில் பெரிதும் உதவும். விவசாயிகளுக்காக இத்தகைய உற்பத்தியாளர் நிறுவனங்கள் வாழை, முருங்கை, விவசாயிகளுக்காகவும் தொடங்கினால் அதிக அளவில் விவசாயிகள் பயன்பெறுவார்கள். அதற்கு அரசு முழு ஒத்துழைப்பு வழங்கும். இத்தகைய விவசாய உற்பத்தியாளர்களின் புதிய அமைப்புகள் விவசாயிகளுக்கு வேண்டிய இடுபொருட்கள், விவசாய கருவிகள், புதிய விவசாய தொழில் நுட்பங்களை உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும். இந்த நிறுவனம் நச்சலூர், நெய்தலூர் பகுதியில் இருக்கும் சுமார் 100 கிராமங்க¬ளை சேர்ந்த விவசாயிகளுக்கு தரமான நெல்விதை, உரம் போன்றவைகளை குறைந்த விலைக்கு கிடைக்கும் வகையில் செயல்படும் என்றார். நபார்டு வங்கியின் சார்பில் இந்நிறுவனத்திற்கு நேரடியாக வழங்கும் ரூ.23 லட்சத்திற்கான கடன் ஆவணத்தை இதன் தலைவர் கரிகாலனிடம் கலெக்டர் ஜெயந்தி வழங்கினார்.

நபார்டு வங்கி துணை பொதுமேலாளர் பார்த்திபன், முன்னோடி வங்கி மேலாளர் முருகேசன், வேளாண் வணிகம் இணை இயக்குனர் ரவி, வேளாண்மை துணை இயக்குனர் சேகர், சரஸ்வதி வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரவியம், முன்னோடி விவசாயி கோபாலதேசிகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வறட்சியல் அழிக்கப்படும் வெற்றிலை தோட்டங்கள்

அரூர், : தர்மபுரி மாவட்டம் கடத்தூர் அருகே உள்ள மோட்டாங்குறிச்சி, நத்தமேடு, டி.அய்யம்பட்டி, பொம்மிடி, திப்பம்பட்டி, தண்டா ஆகிய பகுதிகளில் அதிக அளவில் மலர் மற்றும் வெற்றிலை சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை சரிவர பெய்யாததால், இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் முற்றிலும் குறைந்து, நீர் நிலைகள் வறண்டு காணப்படுகிறது.

எனவே, இப்பகுதி விவசாயிகள் பூந்தோட்டம் மற்றும் வெற்றிலை தோட்டங்களை அழித்து வருகின்றனர். இதுகுறித்து நத்தமேட்டை சேர்ந்த ராமு என்பவர் கூறுகையில், போதுமான நீர் வசதி இல்லாததால், ஏற்கனவே பூந்தோட்டத்தை அழித்து விட்டேன். தற்போது வெற்றிலை தோட்டத்தையும் அழிக்கப் போகிறேன். இதற்கு பதிலாக வறட்சியை தாங்கும் வேறு ஏதேனும் பயிர் செய்யவேண்டும் எனக்கூறினார். மலர் மற்றும் வெற்றிலை சாகுபடி செய்ய முடியாததால், இப்பகுதி விவசாயிகளின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

8.04.2013 A.M

---

## கூடலூர் வனப்பகுதிகளில் இலவம் மரங்களில் காய்ந்து வெடித்து வீணாகும் பஞ்சுகள் அரசுக்கு வருவாய் இழப்பு

கூடலூர்,

கூடலூர் வனப்பகுதி களில் உள்ள இலவம் மரங்களில் காய்கள் வெடித்து பஞ்சுகள் வீணாகி வருகிறது. இத னால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு உள்ளது.

இலவம் பஞ்சு மரங்கள்

தேனி மாவட்டம் கூடலூர், லோயர்கேம்ப் வனப்பகுதி கம்பம் மேற்கு வனப்பகுதியாக அறிவிக்கப்பட்டு உள்ளது. சுரங்கணார் பீட், பெருமாள் கோவில்மெட்டு, லோயர் பெரியாற்றுப்படுகை, தவு லோடை, சாகலூத்து ஆகிய மேற்குபுலம் பகுதிகளில் 100க் கும் மேற்பட்ட ஹெக்டேர் பரப் பளவில் வனத்துறையினர் சார்பில் உயர் ரக இலவம் மரங் கள் வைத்து வளர்த்து பாதுகாக்கப்பட்டு வரு கின்றது.

ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே காய்க்கும் இலவம் மரங்களை பறித்துக் கொள்ளும் உரிமையை வழங்க வனத்துறையினர் மார்ச் மாதம் தேனியில் உள்ள வனத் துறை அலுவலகத்தில் பொது ஏலம் நடத்துவது வழக்கம். இதன் மூலம் அரசுக்கு கனிச மான வருவாய் கிடைக்கும். ஆனால் இந்த ஆண்டு இதுவரை பொது ஏலம் நடத்தப்பட வில்லை.

வீணாகும் பஞ்சுகள்

தற்போது சாலையோரம் மற்றும் பட்டா நிலங்களில் உள்ள இலவம் பஞ்சு காய்கள் பறிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அதிக விளைச்சல் அடைந்து உள்ளதால் விவசாயிகள் ஆர்வத்துடன் இவற்றை பறித்து வருகின்றனர். அதுபோன்று வனப்பகுதியில் உள்ள இலவம் மரங்களிலும் அதிக அளவில் காய்கள் காய்த்து உள்ளன. இந்த காய்கள் பறிக்கப்படாமல் காய்ந்து

வெடித்து பஞ்சுகள் காற்றில் பறந்து வருகின்றன. கடும் வெயில் அடிப்பதால் தினமும் ஏராளமான காய்கள் வெடித்து வீணாகி வருகிறது.

வனத்துறையினர் முன்கூட்டியே பொது ஏலம் நடத்தி இருந்தால் அரசுக்கு பல லட்சம் வருவாய் ஏற்பட்டு ஏற்பட்டு இருக்கும். ஆனால் ஏலம் நடத்தாததால் தற்போது அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு உள்ளது. எனவே எஞ்சி இருக்கும் இலவம் பஞ்சு களை சேகரிக்க வனத்துறை முன்வர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## மார்க்கெட் நிலவரம்: சீனி, துவரை, கொண்டைக்கடலை விலை உயர்வு பாமாயில் விலை குறைந்தது

விருதுநகர்,

விருதுநகர் மார்க்கெட் டில் சீனி, துவரை, கொண்டைக்கடலை ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ள நிலையில் பாமாயில் விலை குறைந்துள்ளது.

உளுந்து

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடை விலை ரூ.3200 முதல் 4 ஆயிரம் வரையிலும், .உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.4,200 முதல் ரூ.5,800வரையி லும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.4,000 முதல் ரூ.4,100வரை யிலும் விற்பனை செய்யப் பட்டது. துவரை 100 கிலோ மூடை ரூ. 200 விலை உயர்ந்து ரூ.3,600முதல் ரூ.4,600 வரையிலும், துவரம் பருப்பு முதல் ரூ.5 ஆயிரம் முதல் ரூ.6, 200 வரை இருந்தது. பாசிப்பயறு 100 கிலோ மூடை ரூ.5,600 முதல் ரூ.6,100 வரையிலும், பாசிப் பருப்பு ரூ.7,700 முதல் ரூ.8,100 வரை யிலும் விலை சொல்லப் பட்டது. விருதுநகர் மல்லி மார்க்கெட்டில் மல்லி நாடு ரகம் 40 கிலோ ரூ.3,600முதல் ரூ.4,000 வரையிலும், மல்லி லயன் ரகம் ரூ.3,000முதல் ரூ.3,400 வரையிலும்விற்பனை ஆனது. வத்தல் சம்பா ரகம் குவிண்டால் ரூ.6,000 முதல் ரூ.7,000 வரையிலும், ஏசி வத்தல் ரூ.8,100 முதல் ரூ.8,300 வரை யிலும், சோடை வத்தல் ரூ.1700 முதல் ரூ.2200 வரையிலும் விலை இருந்தது.

சமையல் எண்ணை

விருதுநகர் எண்ணைமார்க் கெட்டில் கடலை எண்ணை 15 கிலோ ரூ1830 ஆகவும், பாமாயில் 15 கிலோ ரூ.15 விலை குறைந்து ரூ.815 ஆகவும், நல்லெண்ணை 15 கிலோ ரூ.4159 ஆகவும், தேங்காய் எண்ணை ரூ.1,578 ஆகவும், சூரிய காந்தி எண்ணை ரூ.1,410 ஆகவும், நிலக்கடலை

பருப்பு 80 கிலோவுக்கு ரூ.400 விலை உயர்ந்து ரூ.5,200 ஆகவும்,  கடலை புண்ணாக்கு 100 கிலோ ரூ.3,950 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.1,960 ஆகவும் விற்பனை ஆனது.

விருதுநகர் சீனி மார்க் கெட்டில் சீனி ரூ.70 விலை உயர்ந்து ரூ.3175 ஆகவும், கொண்டைக் கடலை குவிண்டால்  ரூ.100 விலை உயர்ந்து ரூ.3,800 ஆகவும், பொரி கடலை 55 கிலோவுக்கு ரூ.2,910 ஆகவும், பட்டாணி 100 கிலோ ரூ.2,900 முதல் ரூ.3000 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. பட்டாணி  பருப்பு ரூ.3,100 முதல் ரூ.3,400 ஆகவும், மசூர் பருப்பு ரூ.4,000 முதல் ரூ.4,100 வரையிலும், மைதா 90 கிலோ ரூ.2,970 ஆகவும், ரவை 90 கிலோ ரூ.2,990 ஆகவும் விற்பனை ஆனது.

காபி

விருதுநகர் காபி மார்க்கெட் டில் காபி பிளாண்டேசன் 'பிபி' ரகம் 50 கிலோ ரூ.9,600 ஆகவும், 'ஏ'ரகம்ரூ.10,000ஆகவும்,'சி' ரகம் ரூ.9,000 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.7,000 ஆகவும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.6,750ஆகவும் விற்பனையானது.

## விவசாயிகள் கிணறு வெட்ட 50 சதவீத வட்டியில்லா கடன் வழங்க வேண்டும் கரும்பு வளர்ப்போர் நல சங்க கூட்டத்தில் தீர்மானம்

கரூர்

விவசாயிகள் கிணறு வெட்ட 50 சதவீத வட்டியில்லா கடன் வழங்க வேண்டும் என்று கரும்பு வளர்ப் போர் நல சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**கரும்பு வளர்ப்போர்**

புகளூர் கரும்பு வளர்ப்போர் நல சங்க நிர்வாகிகள் கூட்டம் கரூரில் நடைபெற்றது.

கூட் டத்திற்கு கரும்பு வளர்ப் போர் நல சங்க தலைவர் ஆடிட்டர் எம்.கே.எம். நல்ல சாமி தலைமை தாங்கினார். செயலாளர் பி.கதிர்வேல், உறுப்பினர் சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

துணை செயலாளர் கே. செல்வம் வரவேற்றார்.

**தீர்மானங்கள்**

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன. அதன் விவரம் வருமாறு:

* காவிரி ஆற்றில் தொடர்ந்து மணல் எடுத்து வருவதால் ஆற்றில் 6 முதல் 9 அடி வரை பள்ளம் ஏற்பட்டு உள்ளது.

இதனால் காவேரி ஆற்றில் உள்ள பாசன வாய்கால் களான நெரூர் வாய்க்கால், வாங்கல் வாய்க்கால், புகழுர் வாய்க்கால் மற்றும் கிளை வாய்காலான பாப்புலர் முதலியார் வாய்க்கால் ஆகிய வற்றில் தண்ணீர் செல்வ தில்லை.

**கொரம்புகள் அமைக்க**

ஆனால் மேற்கூறிய இந்த வாய்க்கால் பாசனம் மூலம் சுமார் 35 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆனால் தற்போது ஆறு பள்ளமாக உள்ள நிலையில் ஆற்றில் தண்ணீர் இருந்தாலும் வாய்கால்கள் சுமார் 6 அடிக்கு மேல் உயரமாக இருப்பதால் வாய்க்கால்களில் தண்ணீர் முழுமையாக வருவதில்லை. எனவே நிரந்தரமாக வாய்க் கால்களில் தண்ணீர் கிடைக்க ஆற்றில் கொரம்புகள் (தடுப்பணை) அமைக்க வேண்டும்.

**வட்டியில்லா கடன்**

* விவசாயிகள் கிணறு வெட்டவும், ஆழ்குழாய் கிணறு அமைக்கவும் 50 சதவீத வட்டியில்லா கடன் வழங்க வேண்டும்.

* நிலத்தடி நீரை குடிநீர் மற்றும் விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண் டும்.

வணிக நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள் பூங்கா பராமரிக்க நிலத்தடி தண்ணீரை அதிக மாக பயன் படுத்துவதை அரசு தடை செய்ய வேண்டும்.

**மத்திய அரசு கடன் தள்ளுபடி**

* ஏழை விவசாயிகளின் பயிர்கள் காத்திட அரசு சமுதாய நோக்கத்துடன் கிணறு தோண்டி பாராமரித்து அவர்கள் பயிர்களை காத்திட நடவடிக்கை எடுக்க வேண் டும்.

* வங்கிகள் விவசாய கடன் வழங்குவதில் சரியான விதி முறைகள் கடைபிடிக்க வேண் டும்.

* விவசாய கடனை தள்ளுபடி செய்ய வேண்டும்.

தற்போது உள்ள கடுமையான வறட்சி நிலையில் தனியார் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் போர் கால அடிப்படையில் கொள் முதல் செய்வது போல், அரசும் கரும்பை கொள்முதல் செய்ய வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கொலக்கம்பை பகுதியில், முட்டைகோஸ் பயிரிட ஆர்வம் காட்டும் விவசாயிகள்

கொலக்கம்பை,

கொலக்கம்பை பகுதியில் தற்போது நடவு செய்யப்பட்டு உள்ள முட்டைகோஸ் பயிர்கள் 2 மாதங்களுக்குள் அறுவடைக்கு தயாராகும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

மலை தோட்ட காய்கறிகள்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தபடியாக மலை தோட்ட காய்கறி பயிர்களை விவசாயம் செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதன் மூலம் ஆண்டுக்கு சராசரியாக வருமானமும் ஈட்டி அதன் மூலம் பயன் பெற்று வருகின்றனர். இந்த நிலையில் கொலக்கம்பை பகுதிகளில் குறிப்பாக தூதூர்மட்டம், கேத்தி பாலாடா, அதிகரட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் மலை தோட்ட காய்கறி பயிர்களான முட்டைகோஸ், உருளைக்கிழங்கு, காலிபிளவர், மேரக்காய், பீன்ஸ் உள்ளிட்டவற்றை பயிர் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், தற்போது நிலவும் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற துமான முட்டைகோசை பெரும்பாலான விவசாயிகள் தங்களது நிலங்களில் பயிர் செய்து உள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் தற்போது போதிய மழை இல்லாததால் நீரோடைகளில் வரும் குறைந்த அளவு தண்ணீரை கொண்டு முட்டைகோஸ் பயிருக்கு நீர்பாய்ச்சி வருகின்றனர்.

முட்டைகோஸ் பயிர்கள்

இங்கு அறுவடை செய்யப்படும் முட்டைகோஸ்களை மேட்டுப்பாளையம், ஊட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மொத்த காய்கறி மண்டிகளுக்கு எடுத்து சென்று விற்பனை செய்து வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் இருந்து விற்பனைக்காக கொண்டு செல்லும் முட்டைகோசை தமிழகம் மட்டுமல்லாமல் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் வியாபாரிகள் மொத்தமாக வாங்கி சென்று வருகின்றனர். கொலக்கம்பை பகுதியில் தற்போது நடவு செய்யப்பட்டு உள்ள முட்டைகோஸ் பயிர்கள் வரும் 2 மாதங்களுக்குள் அறுவடைக்கு தயாராகும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## குன்னூர் ஏல மையத்தில் 72 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர்,

குன்னூர் ஏல மையத்தில் 72 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

தேயிலை ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந் தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார் கள்.

விற்பனை எண் 14க்கான ஏலம் கடந்த மாதம் 4, 5 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 10 லட்சத்து 72 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 7 லட்சத்து 58 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 69 ஆயிரம் கிலோ டஸ்ட் ரக மாகவும் இருந்தது.

72 சதவீத தேயிலை தூள் விற்பனை

இந்த ஏலத்தில் 72 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. இந்த வாரம் நடை பெற்ற ஏலத்தில் தேயிலை தூளுக்கு விலை ஏற்றம் இறக்கம் இல்லாமல் சீராக இருந்தது. இதன் படி சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 192 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூள் 260 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலை யாக ஏலம் சென்றது. சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 85 ரூபாயில் இருந்து 89 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 170 ரூபாயில் இருந்து 185 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 99 ரூபாயில் இருந்து 101 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 130 ரூபாயில் இருந்து 165 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 15க்கான ஏலம் வருகிற 11, 12 ஆகிய தேதிகளில் நடை பெறு கிறது. இந்த ஏலத்திற்கு மொத் தம் 10 லட்சத்து 59 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

## தொழில் பாதுகாப்புக்குழு வேண்டுகோள் தமிழக அரசு பஞ்சு கொள்முதல் செய்து வழங்க வேண்டும்

திருப்பூர்,

திருப்பூர் தொழில் பாதுகாப்புக்குழு ஒருங்கிணைப்பாளர் விஜயகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருப்பூர் பின்னலாடை தொழிலுக்கு தற்போது ஏற்றுமதி ஆர்டர்கள் அதிகரித்துள்ளது. ஆனால் பஞ்சின் விலை செயற் கையாக உயர்ந்து வருகிறது. மத்திய அரசு சரியாக திட்டமிடாததால் பஞ்சு

தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. பஞ்சு உற்பத்தி குறைந்து உள்நாட்டு தேவைக்கே பற்றாக்குறை இருக்கும் சூழ்நிலையில் மத்திய அரசின் இந்திய பருத்திக்கழகம் தன் வசமுள்ள 15 லட்சம் பேல் பஞ்சை லாப நோக்கத்தோடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மத்திய அரசிடம் அனுமதி பெற்றுள்ளது.

நம் நாட்டில் உற்பத்தியான பஞ்சை குறைந்த விலைக்கு ஏற்றுமதி செய்து விட்டு, நமது நாட்டு தேவைக்கு வெளிநாடுகளில் இருந்து அதிக விலைக்கு பஞ்சை இறக்குமதி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது. தமிழகத்தில் உள்ள நூற்பாலைகள் இந்திய பஞ்சு உற்பத்தியில் 50 சதவீதத்தை கொள்முதல் செய்கின்றன.

தற்போது ஏற்பட்டுள்ள பஞ்சு தட்டுப்பாட்டால் ரூ. 5 ஆயிரம் கோடிக்கு பஞ்சை இறக்குமதி செய்ய வேண்டி நிலை உள்ளது. எனவே இந்திய பருத்தி கழகத்தின் பஞ்சு ஏற்றுமதி முடிவை மத்திய அரசு தடை செய்ய வேண்டும். உள்நாட்டு நிறுவனங்களுக்கு தேவையான பஞ்சை சரியான விலைக்கு வழங்க வேண்டும்.

தமிழகத்தில் மட்டும் 125 லட்சம் பேல் பஞ்சு தேவைப்படுகிறது. தமிழக அரசே நேரடியாக விவசாயிடம் இருந்து உரிய விலைக்கு பஞ்சை கொள்முதல் செய்து கம்பெனிகளுக்கு நேரடியாக நியாயமான விலையில் வழங்கும் வகையில் இந்திய பருத்திக் கழகத்தைப் போல் தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

இதன் மூலம் பின்னலாடை தொழிலை தமிழக அரசு காப்பாற்ற முடியும். தமிழக அரசு உடனடியாக தலையிட்டு திருப்பூர் தொழிலை காப்பாற்ற வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் விஜயகுமார் கூறியுள்ளார்.

## நிலத்தடிநீரை பயன்படுத்தும் மாவட்டங்களில் விவசாய கிணறுகளை தூர்வார ரூ.50 ஆயிரம் மானியம் வழங்கவேண்டும் உழவர் சங்க கூட்டமைப்பு கோரிக்கை

ஆரணி,

நிலத்தடிநீரை பயன் படுத்தி சாகுபடி செய்யும் மாவட்டங்களில் கிணறுகளை தூர்வார ரூ.50 ஆயிரம் மானியம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செயற்குழு கூட்டம்

திருவண்ணாமலை மாவட் டம், ஆரணி பழைய தாலுகா அலுவலகம் எதிரே தமிழக உழவர் சங்கங்களின் கூட்ட மைப்பு ஆரணி வட்டார செயற்குழு கூட்டம் மாவட்ட தலைவர்

ஜி.புருஷோத்தமன் தலைமையில் நடைபெற்றது. வட்டார தலைவர் ஏ.ஜெய பாலன், விவசாயிகள் ஆர்.ராஜ மாணிக்கம், சச்சிதானந்தம், கஸ்தூரி, முனுசாமி, பழனி சாமி, விஜயரங்கன், அர்ஜீனன், லட்சுமணன் உள்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

<u>நீர்வரத்து பாதிக்கும்</u>

தென் பெண் ணை ஆற்றின் குறுக்கே கர் நாடக அரசு கோலார் மாவட் டம் தத்தனூர் என்ற இடத்தில் புதிய நீரேற்று நிலையும் அமைப்பதால் நிலத்தடி நீர் அதிகம் உறிஞ்சப்படும். இதனால் கீழ் மடை கெலவ ரப்பள்ளி அணை, கிருஷ்ணகிரி அணை, சாத்தனூர் அணை, சொர்ணவாரி அணை, எல் லீஸ் அணைகளின் பாசன பகுதிகள் நீர்வரத்து காலங் களில் பெரிதும் பாதிக்கப் படும்.

<u>ரூ.50 ஆயிரம் மானியம்</u>

ஆகவே மத்திய அரசு தலை யிட்டு நீரேற்று நிலையத்தை அகற்ற வேண்டும். திருவண் ணாமலை மாவட்டம் மற்றும் நிலத்தடி நீரை பயன்படுத்தி சாகுபடி செய்யும் மாவட் டங்களில் பழுதடைந்துள்ள கிணறுகளை தூர் வாரி சீர் அமைக்க ரூ. 50 ஆயிரம் மான்ய மாக வழங்க வேண்டும்.

நடப்பு மாநில பட்ஜெட்டில் கரும்பு சட்டம் நியாயமற்ற ஆதாய விலை நீக்கி கரும்பு டன்னுக்கு ரூ.2,500 வழங்கா தது ஏமாற்றத்தை அளிக்கிறது. ஆரணி வட்டாரத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை உடனடியாக செயல்படுத்தி நெல் விலை விழ்ச்சியை கட்டுப்படுத்த வேண்டும். மேற்கண்டவை உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.